ஆனந்தோதயம்

'தொழிலுக்கும் உழவுக்கும்
தொண்டு புரிவோம்.'

மலர் 1. டிஸம்பர் 1950. இதழ் 13.

பொருளடக்கம்

	பக்கம்
உஷார் மனப்பான்மை	3
எஃகு தொழிற்சாலையில் (படம்)	5
தொழில் உலகம்	6
பாதுகாப்பு அணிகள் (படம்)	7
தேசிய உடமையான தொழில்கள் (ஹெர்பர்ட் டிரேஸி)	8
உஷார்! கவனி தம்பி! (கார்ட்டூன்)	9
தேவானை (தொடர்கதை) ... பி. எம். கண்ணன்	10
சென்னையில் புதிய மெட்டல் பாக்ஸ் கம்பெனி (படம்)	15
பி. அண்ட் ஸி. மில் கிளார்க்குகள் சங்கம் (படங்கள்)	16, 17
பேர் பிறந்தது! (சிறுகதை) ... 'விஜயா'	19
உலகத் தொழிலாளர் சம்மேளனம்	25
கந்தக ஏரிகள் (கட்டுரை)	26
மரமும் செடியும்	28
பட்டாச்சி (பாப்பாக் கதை) ... 'ஜில்'	30

'ஆனந்தோதயத்'தில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனை. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

கட்டுரையாளருக்கு:—தொழிலாளர் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட ருசிகரமான சிறுகதைகள், சமூகவாழ்க்கைப் பிரச்னைகளைத் தாங்கிய கதைகள், ஹாஸ்யக்கட்டுரைகள், அறிவூட்டும் கட்டுரைகள், பாட்டுகள், விடுகதைகள், விகடத்துணுக்குகள் எதுவாயினும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதியனுப்புக. 'ஆனந்தோதயத்'தில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமலிருப்பது நல்லது. காகிதத்தின் இருபக்கங்களும் எழுதியனுப்[illegible] [illegible]கள் கவனிக்கப்படமாட்டா. [illegible] கடிதம் அவசியமில்லை. பிரசுரமாகாத கட்டுரைகளைத் [illegible] பெற விரும்புவோர் போதிய [illegible]னுப்பவேண்டும்.

—ஆ-ர்

'ஆனந்தோதயம்' [illegible]னை-2.

224221
224221

நரஸூஸ்
காபிதூள்

உங்கள் பிரியமுள்ள பானம்

இப்பொழுது எங்கும் கிடைக்கும்

உயர்ந்த ரக பிளாண்டேஷன் பீபெர்ரி,
எக்ஸ்ட்ரா போல்ட்
காப்பிக்கொட்டைகளும்

7 பவுண்டு, 3 பவுண்டு, $1\frac{1}{2}$ பவுண்டு, $\frac{3}{4}$ பவுண்டு
ஸீல் வைத்த துணிப்பைகளில் கிடைக்கும்



நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி, லிட், சேலம்

உஷார் மனப்பான்மை

"ஏய் ஓடாதே! விழுந்துவிடப்போகிறாய், மெள்ள நட!" என்று உரக்கக் கூவுகிறார் தாத்தா திண்ணையில் உட்கார்ந்தபடியே. அவரது செல்லப் பேரன் தலை தெறிக்க ஓடுவதைப் பார்க்கும்போது, எங்கேயாவது தடுக்கி விழுந்து காலை, கையை முறித்துக் கொள்ளப் போகிறானே என்கிற கவலை அவருக்கு.

"ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டாதே; கதவு தலைமேல் விழுந்துவிடப் போகிறது" என்று தன் சின்ன மகனை எச்சரிக்கிறாள் அவனுடன் ரயில் பிரயாணம் செய்யும் அவனது அருமைத்தாய். பையன் ரயிலில் ஏறும்போதே ஜன்னல் அருகில் தான் உட்காருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறான். அவன் விருப்பத்தை தாய் தடுக்கவில்லை. ஆனால் அவனது சிறு பிள்ளைத்தனத்தினால் ஏதாவது ஆபத்து நேரிடப்போகிறதே என்கிற கவலை அவளுக்கு. அதனால் தான் எச்சரிக்கை செய்கிறாள்.

மேலே கூறியது போல பல உதாரணங்கள் நமது தினசரி வாழ்க்கையிலிருந்து எடுத்துக்காட்டலாம். மனிதனுடைய உள்ளத்தை ஏதோ ஒருவித பயம் ஆட்கொண்டிருக்கிறது. அதனால்தான் எதற்கெடுத்தாலும் இப்படி உஷார், ஜாக்கிரதை என்கிற போக்கிலே அவன் போகிறான் என்று சிலர் கருதக்கூடும். ஆனால் உண்மை அதுவல்ல. உயிர்வாழும் எந்தப் பிராணியிடத்திலும் இயற்கையாக உள்ள உஷார் மனப்பான்மைதான் இதற்குக் காரணம். பெரியவர்கள் வளரும் குழந்தைகளிடத்தில் தேங்கியிருக்கும் இந்த உஷார் மனப்பான்மையை அவர்களுக்குப் போதனை மூலம் உணர்த்திப் பயிற்சியளிக்கிறார்கள் என்பதைத்தான் இந்த உதாரணங்கள் விளக்குகின்றன.

விஷத்தைக் கக்கும் பாம்புகூட தன்னைக் காப்பாற்றிக் கொள்வதில் உஷாராயிருக்கிறது. கல்லைக் காணும் நாய் காத தூரம் ஓடுகிறது. இதெல்லாம் உஷார் மனப்பான்மையே யன்றோ? ஐந்து அறிவேயுள்ள பிராணிகளும், விலங்கினங்களும் உஷாராயிருக்கையில் ஆறுவது அறிவையும் அருமையாகப் பெற்றுள்ள மனிதன் இந்த மனப்பான்மையை எவ்வளவுதூரம் இன்று வளர்த்து விஸ்தரித்துக்கொண்டு வாழ்க்கை நடத்திவருகிறான் தெரியுமா? அதுவே ஒரு தனிக்கதை.

முக்கியமாக தொழிற்சாலையில் வாழும் மனிதர்களின் கதையை மாத்திரம் இங்கே ஆராய்வோம். யந்திர பூதங்களுக்கு மத்தியில், பலவிதமான நுண் கருவிகளுக்கு இடையே தொழிலாளத் தோழன் இன்று வாழ்ந்துவருகிறான். இயல்பாகவே அவன் பல உஷார் விதிகளை அறிந்து அதன்படி தான் நடந்துவருகிறான். ஆனால் எப்படி ஒரு குழந்தையின் இயல்பிலே தேங்கிக் கிடக்கும் உஷார் மனப்பான்மையை அதன் தாயோ, பாட்டனோ தக்க தருணத்தில் எச்சரிக்கை மூலம் எடுத்துரைத்து அறிவிக்கிறார்களோ, அதே விதமாக தொழிலாளத் தோழனின் உணர்வையும் தட்டி எழுப்புவது அவசியமாக இருக்கிறது. இந்த உண்மையை பல தொழில் நிபுணர்கள் வருஷக் கணக்கில் தொழிற்சாலைகளிலிருந்து அனுபவ பூர்வமாகக் கண்டுபிடித்தனர். அதன் பயனாகத்தான் தொழிற்சாலைகளில் உஷார் நடவடிக்கைகளும், உஷார் விதிகளும் பிறந்தன. சென்ற ஆண்டில் ஜினீவாவில் நடைபெற்ற சர்வதேசத் தொழில் ஸ்தாபனத்தின் மகாநாட்டின்போது சுமார் 25 நாடுகளின் தொழில் பிரதிநிதிகள், தொழில்முதலாளிகள், சர்க்கார் அங்கத்தினர்கள் ஆகியவர்கள் கூடி உலகநாடுகள் எல்லாவற்றிலும் உள்ள தொழிற்சாலைகளுக்கும், தொழில் மக்களுக்கும் பயன்படுமாறு உஷார் விதிகளையும், நடவடிக்கைகளையும் புதுப்பித்துச் சீர்திருத்தியமைத்துச் சிபார்சு செய்துள்ளனர்.

நடந்து செல்லும்போது கவனிக்கவேண்டிய விதிகள், விழாமல் பாதுகாத்துக்கொள்வது எப்படி, யந்திரங்களிடம் எந்த விதமாக நடந்துகொள்ள வேண்டும்? எந்த விதமான ஆடை தரித்துக்கொண்டு தொழிலில் ஈடுபடவேண்டும்? கையாளும் கருவி

களின் நிலைமை என்ன என்பதைப் பரிசோதிக்கவேண்டிய அவசியம், சாமான்களைக் கொண்டு செல்லும்போதும் கவனிக்கவேண்டிய விதிகள், பாதுகாப்புக் கருவிகளாகிய ஸ்கிரீன், காகிள்ஸ், கிளவ்ஸ், முதலியவற்றை உபயோகிக்கவேண்டிய அவசியம், நெருப்பு ஏற்பட்டால் அதை அவிப்பதும் அதனின்று தப்புவதும் எப்படி ? மின்சார சக்தியிடம் எப்படிப் பழகவேண்டும், சுத்தமும் ஒழுங்கும் எப்படிப் பல விபத்துக்களைத் தடுக்கக்கூடியவை, விபத்து சம்பவித்துவிட்டால் பிரதம சிகிச்சை ஆகியவைபோன்ற பல கருத்துக்களைப்பற்றி உஷார் விதிகளிலும், நடவடிக்கைகளிலும் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளன. இவைபற்றி அச்சடித்த நோட்டீசுகள் தொழிற்சாலை சுவர்களில் தொங்குவதைக் காணலாம்.

ஆயினும் விபத்துக்கள் முற்றிலும் நீங்கினபாடில்லை. இதற்குக் காரணம் உஷார் நடவடிக்கைகள், உஷார் விதிகள் ஆகியவை போதுமானவையல்ல என்பது அல்ல ; மக்களிடத்தில் தேங்கிக் கிடக்கும் உஷார் மனப்பான்மையை அவ்வப்போது தட்டியெழுப்பவில்லை என்பதுதான். அதோடு அந்த மனப்பான்மையை அலக்ஷ்யப்படுத்தும்படியான வக்ர புத்தி மனிதனுக்கு ஏற்படுவதும் கூட.

சாலையில் நிற்கும் போலீஸ்காரன் வண்டிப்போக்குவரத்தை ஒழுங்குப் படுத்தித் தருகிறான். அவன் 'டியூடி' யிலிருக்கும் போது ஒரு மோட்டாரை பின்னால் வரும் மோட்டார் 'ஓவர் டேக்' பண்ணுவதில்லை. அவன் அங்கேயில்லாதபோதும் மோட்டார் ஓட்டிகளுக்கு அந்த விதியும் சட்டமும் தெரிந்தவைதான். ஆனால் சிலருக்கு வக்ர புத்தி ஏற்படுகிறது ; ஓர் அசட்டுத் துணிச்சலும், படபடப்பும் அவசரமும் தலையெடுக்கின்றன. பின்னால்வரும் மோட்டார் ஓட்டி சட்டென்று 'ஓவர் டேக்' பண்ணுகிறான். முன்னால் செல்லும் மோட்டார் ஓட்டி இதை எதிர்பார்த்துத் தக்கவாறு நடந்து கொள்ளாவிட்டால், விபத்து நிச்சயமாக ஏற்பட்டுவிடுகிறது. சில சமயம் இருவருக்குமே போட்டி ஏற்பட்டு விபத்தை வரவேற்பதில் இருவருமாகப் பங்குபோட்டுக் கொள்ளுகிறார்கள். இவ்வளவும் எதனால்? இருவரும் தங்களது உஷார் மனப்பான்மையைக் காற்றிலே விட்டதனால்தான். அதனுடன் அதை அவர்களுக்குத் தக்க சமயத்தில் எடுத்தோத போலீஸ்காரன் சாலையில் இல்லாததாலும்தான்.

இதேமாதிரி தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளியும் தனது உஷார் மனப்பான்மையைக் காற்றிலே விட்டுவிடுகிறான். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றை ஏற்கனவே சென்ற இதழ்களுள் ஒன்றில் 'தொழில் விபத்துக்கள்' என்னும் தலையங்கத்தின் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளோம். அக்காரணங்களுள் ஒன்றாகிய தொழிலாளியின் மனப்பான்மையைப்பற்றி இங்கே ஆராய்வோம்.

தொழிலாளியின் மனம் ஒரு நிலையில் இல்லை என்பதும் இன்று பல விபத்துக்களுக்குக் காரணமாக விளங்குகிறது. இது நமது கருத்து மாத்திரம் அல்ல ; அமெரிக்காவில் உள்ள ஓஹியோ மாகாணத்திலே நிறுவப்பட்டுள்ள தொழில் கமிஷனைச் சார்ந்த உஷார், சுகாதார, இலாக்காக்களின் ஸூபரின்டெண்டான ஸ்ரீ ஹாரி எல். ஸெய்ன் என்பவரும் கருதுகிறார்.

தொழிற் சாலைகளில் ஏற்படும் பெரும்பாலான விபத்துக்களுக்கும், தொழிற்சாலைகளில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் உஷார் விதிகளுக்கும் அனேகமாக சம்பந்தம் இருப்பதில்லை என்று ஸ்ரீ ஸெயின் கூறுகிறார். 'வேலை செய்யத் தகுதியான சகல வசதிகளும் உள்ள தொழிற்சாலைதான் ; எல்லா உஷார் நடவடிக்கைகளும், விதிகளும்தான் பின்பற்றப்படுகின்றன ; உஷாராயிருக்கத் தேவையான பாதுகாப்புக் கருவிகள் எல்லாம்தான் இருக்கின்றன ; அவைகளைக் குறை சொல்லவே முடியாது ; ஆனால் அவைகளுக்கும், நேரும் விபத்துக்களுக்கும் பெரும்பாலும் சம்பந்தமேயில்லை என அறிக்கைகளிலிருந்து தெரியவருகிறது'.

இந்த நிலைமைக்கு, தொழிலாளியின் உள்ளம் உஷார் மனப்பான்மையைக் கடைப்பிடிக்க முடியாதபடி சஞ்சலமடைந்திருப்பதுதான் காரணம் என்று அவர் வர்ணிக்கிறார். தொழிலாளியின் உள்ளம், ஏன், இன்று மற்ற எல்லா மக்களின் உள்ளமுமே, பலதிறப்பட்ட கவலைகளுக்குள் மூழ்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. அடிக்கடி சம்பவிக்கும் யுத்தங்கள், பின்னர் ஏற்படும் நெருக்கடிகள், பொருளாதார முடை, பண்டம் பாடிகளுக்குத் தட்டு, பெருகி வரும் குடும்பச் சுமை, இப்படிப் பல பிரச்னைகள் மக்களது உள்ளங்களைச் சல்லடைக் கண்ணாகத் துளைக்கின்றன. சமாதான கால வாழ்க்கை, சமாதான கால பொருளாதார அமைப்பு, சமாதான கால விலைவாசிகள் என்று எண்ணுகிறது மனித உள்ளம். ஆனால் இன்றைய உலகில் எங்கேயோ கேட்கும் போர் முரசு, உள்ளத்தைப் பின்னமடையச் செய்கிறது. மனித வாழ்க்கையை ஒரு பெரிய சோதனையாக அமைத்து விடுகிறது. இத்தகைய சூழ் நிலையில்தான் இன்று தொழிலாளியும் சிந்தனை செய்கிறான் ; வாழ்க்கை நடத்துகிறான். இதனால்தான் அவனது உள்ளத்தில் உஷார் மனப்பான்மை அடிக்கடி தேங்கியே போகிறது. ஆகவேதான் பலவித விபத்துக்கள், உஷார் விதிகள், நடவடிக்கைகள்



இரும்பு — எஃகு தொழிற்சாலையில் யந்திரத்தில் வேலைசெய்யும் தொழிலாளி.

ஆகியவற்றின் சக்தியையும் வரம்பையும் மீறிய எதிர்பாரா இன்னல்கள் வாய்த்துக் கொள்ளுகின்றன. இந்த விஷயத்தை வெகு தெளிவாகக் கூறியுள்ளார் ஸ்ரீ ஸெய்ன் ஒரு கட்டுரையிலே.

தொழிலாளிக்கு உஷார் மனப்பான்மை மரத்துப் போகும்படியான பல தருணங்கள் ஏற்படுகின்றன. அத்தருணங்களில் அந்த உணர்ச்சியைத் தட்டியெழுப்பவேண்டியது அத்தியாவசியமாகும். உஷார் மனப்பான்மை குறைவதால் விபத்துக்கள் சம்பவிக்கின்றன ; சம்பந்தப்பட்ட தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் இதனுல் பாதிக்கப்படுகின்றனர். தொழிற் சாலையிலும் உற்பத்தி குறைகிறது. இன்றைய பொருளாதார அமைப்பிலே, உற்பத்திக் குறைவு என்றுல் அதன் விளைவு முதலாளிகளை மாத்திரமின்றி, தொழிலாளரையும், நாட்டு மக்களையும் கூடப் பெரிதும் பாதிக்கவல்லது. இந்த நிலைமைக்கு இடங் கொடாமலிருக்க மக்களிடம் இயல்பாக இருக்கும் உஷார் மனப்பான்மை தேங்கி மரத்துப்போய்விடாமல் பாதுகாக்கப்படவேண்டும் ; பயன் படுத்தப்படவும் வேண்டும்.

தொழில் உலகம்

இந்தியா, இஸ்ரேல் இந் நாடுகளுக்கு, 1951 மார்ச் 31-ந் தேதிக்குள் 84,000 சிப்பம் பஞ்சு ஏற்றுமதி செய்வதற்காக ஒதுக்கிவைக்கப் பட்டுள்ளதென அமெரிக்க விவசாய இலாகா அறிவிக்கிறது. இதில், இந்தியாவிற்கு 80,000 சிப்பம் கிடைக்கும்.

* * *

நியூயார்க் நகரில் இப்பொழுது நடைபெறும் மாதர்களின் சர்வதேசக் கண்காட்சியில், கையால் செய்யப்பட்ட பல நாடுகளின் சாமான்கள் காணப்படுகின்றன.

இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாடுகளும் இதில் பங்கெடுத்துக்கொண்டுள்ளன. இந்தியா அனுப்பிய பொன்னுடைகளும், தந்தச் சாமான்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்க தேசீய மாதர் சங்கத்தின் ஆதரவில் மேற்படி கண்காட்சி நடைபெறுகிறது.

உலகின் மாதர்களிடையே நட்பும் நல்லெண்ணமும் வளரச் செய்வதே சங்கத்தின் நோக்கம்.

* * *

அமெரிக்க பிரயாண ஏஜென்சிகள் சங்கத்தின் 20-வது வருஷாந்திர மகாநாட்டில், இந்தியாவும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்திய பிரயாணத் தொழிலை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகிறதென இந்தியப் பிரதிநிதி ஸ்ரீ கடகாரா கூறினார். பிரயாணிகளின் சௌகரியத்திற்காக முக்கிய இந்திய நகரங்களில் செய்தி நிலையங்கள் சமீபத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளதாகவும், அவர்களைக் கவர்ச்சி செய்யும் பொருட்டு ஹோட்டல்களில் நவநாகரீக வசதிகள் செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மற்றொரு இந்தியப் பிரதிநிதியான ஸ்ரீ டௌர் பேசுகையில், இந்தியாவில் துறைமுக அனுமதி சீக்கிரம் கிடைப்பதற்காக "பிரயாணி அறிமுகச் சீட்டு" தரப்படுவதாகவும், அரசாங்க விடுதிகளில் பிரயாணிகளுக்கு அதிகமான பெட்ரோல் கூபன்கள் கொடுக்கப் படுவதாகவும் கூறினர்.

* * *

அமெரிக்கா, இந்தோனேஷியா இந் நாடுகளுக்கிடையே சமீபத்தில் ஏற்பட்ட பொருளாதாரக் கூட்டுறவு ஒப்பந்தத்தின்படி அமெரிக்கா இந்தோனேஷியாவிற்கு பொருளாதார, தொழில் நுணுக்க உதவி அளிக்கும்.

ஜகார்த்தாவில் கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் உறுதியான பொருளாதாரம், நிலையான சர்வதேச உறவு இவைகள் ஏற்பட ஏதுவாகுமென அமெரிக்க ராஜாங்க இலாகா கருதுகிறது. இலாகா வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு கூறுகிறது :—

"உறுதியான பொருளாதாரமும் நிலையான சர்வதேச உறவும் ஏற்படுத்தும் பொருட்டு அமெரிக்காவும் இந்தோனேஷியாவும் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை இந்த ஒப்பந்தம் விவரிக்கிறது.

பொருளாதார, தொழில் நுணுக்க உதவி செய்வதற்கான ஒப்பந்த ஏற்பாடுகள், இந்தோனேஷிய மக்களுக்கு பூரண நன்மை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்யப்பட்டன."

பொது சுகாதாரம், விவசாயம், கல்வி, தொழிலபிவிருத்தி இது போன்ற துறைகளிலும், இந்தோனேஷிய அரசாங்கம் விரும்பும் மற்ற விஷயங்களிலும் அமெரிக்க உதவி அளிக்கப்படுமென அறிக்கை தெரிவிக்கிறது.

* * *

அடுத்த வருடம் ஜனவரி மாதம் புதுடில்லியில் உலக சக்தி மகாநாட்டின் கூட்டம் நடைபெறவிருக்கிறது. இதையொட்டியே டில்லியிலேயே "பெரிய அணைக்கட்டுகள் பற்றிய சர்வதேச கமிஷனின் கூட்டங்களும் நடைபெறும். இம்மகாநாடுகளில் சுமார் 20 பிரிட்டிஷ் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். பிரிட்டிஷ் பிரதிநிதி கோஷ்டியில் ஸர் வின்செண்ட்டி பொராண்டி (உ.

ச. மா. சர்வதேச நிர்வாக கவுன்சிலின் சேர்மன்), ஸர் ஆர்தர் பிள்மெந்த் ஜே. டபிள்யூ. வார்னக், டாக்டர் ஹி. பெர்ஹெட் ஆகியவர்களும் அடங்கியிருப்பர். மகாநாட்டையொட்டியே சர்வதேச எஞ்ஜினீரிங் கண்காட்சியொன்றும் நடைபெறும். நீர், சக்தி, இவைகுறித்த ஆராய்ச்சி ஆகியவைகளும் பந்தமாக நடைபெறும். எஞ்ஜினீரிங் நடவடிக்கைகளை இக்கண்காட்சி சித்தரிக்கும். புது டில்லி மகாநாடு ஜனவரி 10உ இருந்து 15உ வரை நடைபெறுமென அறியப்படுகிறது.

* * *

இந்தியாவின் பொருளாதாரச் செல்வங்களை ஆதர்சித்துக் காட்டும் நோக்கத்துடன் பிரிட்டனிலுள்ள இந்திய ஹை கமிஷனர் ஏற்பாடு செய்துவரும் கண்காட்சிகளில் இரண்டாவது தற்போது இந்தியா மாளிகையில் ஆரம்பமாகியிருக்கிறது. இந்தியாவின் ஜவுளி வகையருக்களைப்பற்றியது தான் முதல் கண்காட்சி.

தற்போது ஆரம்பமாகியிருக்கும் கண்காட்சி இந்தியாவின் இயற்கை மூலப்பொருள்களைச் சித்தரிக்கிறது. இக்காட்சி (1) உலோகங்கள், கனிப்பொருள்கள் (2) வன மூலாதாரங்கள், (3) தோட்டத்தொழில்கள் (4) தோல், தோல் சாமான்கள், (5) எண்ணெய்கள், எண்ணெய் வித்துக்கள், (6) ரசாயனப் பொருள்கள், மருந்துகள், (7) புகையிலை, அரக்கு, (8) வாசனைத் திரவியங்கள் என எட்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இக்காட்சி ஒரு மாத காலத்திற்கு திறந்திருக்கும்.

முதல் பிரிவில் இரும்பு, உருக்கு தவிர தாதுப் பொருள்கள், கட்டிட சாமான்கள் எல்லாம் கச்சாநிலையில் வைக்கப்பட்டுள் ளன. உருககு உற்பத்தியில் இந்தியா வகிக்கும் முக்கியத்துவத்தை காமன் வெல்த்திலேயே பெரியதான டாட்டா உருக்கு உற்பத்தித் தொழிற்சாலையின் மாடல் ஒன்று எடுத்துக்காட்டுகிறது. இதைத் தவிர இந்தியாவில் கிடைக்கும் 35 விதமான தாதுப் பொருள்களின் மாதிரிகள் காட்சியில் இடம் பெற்றுள்ளன. இந்த் தாதுப் பொருள்கள் எல்லாம் எந்தெந்த விதங்களில் பயன்படுகின்றன என்பதைக் காட்டுவதான புகைப் படங்களும் மாட்டப்பட்டுள்ளன.

இரண்டாவது பிரிவில் இந்தியாவின் வனச் செல்வங்கள் இடம் பெற்றுள்ளன. இங்கு வனங்களிலிருந்து கிடைக்கும் மரங்கள், எண்ணெய்கள், ரெஸீன், மெழுகு, கோந்து மருந்துச் செடிகள், வர்ணங்கள் ஆகியவற்றின் மாதிரிகள் உள்ளன. மற்றொரு பிரிவில் தோட்டத் தொழில்களான காப்பி, தேயிலை, கரும்பு, ரப்பர் ஆகியவை காட்டப்படுகின்றன. தேயிலை பயிர் பருவம் முதல் டப்பாக்களில் அடைக்கப்படும் வரை சகலவற்றையும் காட்டும் மாதிரி தொழிற்சாலையொன்றும் இங்கு உள்ளது.

தோல் பதனிடுதல், பாதரட்சைகள், தோல் சாமான்கள் உற்பத்தியில் இந்தியா வகிக்கும் முக்கியத்துவத்தை நான்காவது பிரிவு சித்தரிக்கிறது. ஐந்தாவது பிரிவில் எண்ணெய்கள், எண்ணெய் வித்துகள் இடம் பெற்றுள்ளன. இந்தியாவில் தயாரிக்கப்படும் ரசாயனப் பொருள்கள், மருந்து வகையருக்களை காட்டுகிறது ஆறுவது பிரிவு.

புகையிலை உற்பத்தியில் உலகிலேயே மூன்றுவது பெரிய நாடு இந்தியா என்பதை ஞாபகப்படுத்தும் தோரணையில் இந்தியப் புகையிலையின் மாதிரிகள் அடுத்த பிரிவில் இடம் பெற்றுள்ளன. இந்தியா வருடத்திற்கு ஆறு கோடி முதல் ஏழு கோடி ராத்தல் வரை ஏற்றுமதி செய்கிறது. இந்தியப் புகையிலைக்கு பிரிட்டன் தான் பிரதம வாடிக்கைக்கார நாடாக இருந்துவருகிறதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ரயில்வே தொழிற்சாலையில் ஒரு தொழிலாளி பாதுகாப்பு பூட்ஸுகள் அணிகிருர். எதிரை மேஜைமீது உஷாராயிருப்பதற்காக மூக்கு கண்ணடிகள், கையுறைகள், செருப்புகள் முதலியன இருப்பதை காணலாம்.

தேசிய உடமையான தொழில்கள்

[ஹெர்பர்ட் டிரேஸி]

பிரிட்டனில் சில முக்கிய தொழில்கள் தேசிய உடமையாக்கப்பட்டுள்ளன அல்லவா ? இத் தொழில்களில் தொழிலாளி—மானேஜ்மெண்ட் உறவுகள் எவ்வாறு அபிவிருத்தி அடைந்து வருகிறதென்பதையே இக் கட்டுரை விவரிக்கிறது.

பிரிட்டனில் போக்கு வரத்து சர்வீசுகள் எல்லாம் தேசீயமயமாக்கப்பட்டவை. ஆகவே இந்த சர்வீசுகளை கவனித்து வரும் பொறுப்புகள் எல்லாம் பிரிட்டிஷ் போக்குவரத்து கமிஷன் என்ற ஸ்தாபனத்திடம் இருக்கின்றன. இந்த ஸ்தாபனத்தின் கீழ் வேலை பார்க்கும் ஊழியர்களின்—தொழில் வல்லுநர், குமாஸ்தாக்கள், நிர்வாக ஊழியர்கள், தொழிலாளர்கள்—மொத்த எண்ணிக்கை சுமார் ஒன்பது லட்சமாகும். சம்பளம், கூலியாக இருந்த ஸ்தாபனம் பட்டுவாடா செய்யும் தொகை 30 கோடி பவுனுக்கு மேற்பட்டதாகும். ஆகவே இம் மாபெரும் தேசிய உடமைத் தொழிலில் முதலாளி-மானேஜ்மெண்ட் உறவு எவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறதென்பது சகலருக்கும் ஆர்வமேற்படுத்தக்கூடிய விஷயமாகும்.

பிரஸ்தாப போக்கு வரத்து கமிஷனில் ஐந்து அங்கத்தினர்கள் அடங்கியிருக்கின்றனர். இந்த அங்கத்தினர்களில் இருவர் கமிஷனில் சேருவதற்கு முன்னர் தொழிலாளர் யூனியன் இயக்கத்தில் பல முக்கிய பதவிகளை வகித்து வந்தவர்கள். உதாரணமாக அவ்விருவரில் ஒருவரான மிஸ்டர் ஜான் பென்ஸ்டெட் தேசிய ரயில்வே தொழிலாளர் யூனியனில் பொதுக் காரியதரிசியாக இருந்தவர் ; மற்றெருவரான லார்டு ரஸ்ஹோல்ம் கோவாபரேடிவ் யூனியனுக்கு பொதுக் காரியதரிசியாக இருந்தவர்.

பிரிட்டிஷ் போக்கு வரத்து கமிஷன் சகல உள்நாட்டு போக்கு வரத்து சர்வீசுகள்மீதும்—ரயில்வேக்கள், ரஸ்தா பிரயாணி, வர்த்தக போக்குவரத்துகள், துறைமுகங்கள், உள்நாட்டு நதிப் போக்கு வரத்து, இந்த சர்வீசுகளிலடங்கிய ஹோட்டல்கள், இதர கேட்டரிங் சர்வீசுகள்—அதிகாரம் செலுத்தி வருகிறது. இவ்வளவு பெரிய ஸ்தாபனங்கள் அதன் கீழ் இருப்பதால் பிரிட்டிஷ் போக்கு வரத்து கமிஷன் தொழில் உறவுகளில் புது முறையொன்றை அபிவிருத்தி செய்ய நல்ல சந்தர்ப்பம் பெற்றிருந்தது.

பிரிட்டிஷ் போக்கு வரத்து கமிஷனின் இரண்டாம் வருட அறிக்கை அண்மையில் தான் சம்பந்தப்பட்ட மந்திரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சகல தொழிலாளர்களுடனும் சுமுகமான, நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டியதன் அவசியத்தை மேற்படி அறிக்கை வெகுவாக வற்புறுத்துகிறது.

இந்த சுமுகமான உறவுகளை மேலும் மேலும் அபிவிருத்தி செய்ய ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கை தக்க அத்தாட்சிகளுடன் பாத்தியத்தை கொண்டாடுகிறது.

தேசிய மயமாக்கப்பட்டுள்ள போக்குவரத்து சர்வீசுகளிலுள்ள ஒரு முக்கிய விசேஷ அம்சம் என்னவென்றுல் தொழில் உறவுகளை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள கூட்டு ஆலோசனை கவுன்சில் என்ற உறுப்புதான். போக்கு வரத்து கமிஷனின் கீழுள்ள ஆறு நிர்வாகக் குழுக்களின்—(1) ரயில்வே (2) லண்டன் நகர் போக்குவரத்து (3) ஹோட்டல்கள் (4) ரஸ்தா போக்கு வரத்து (5) ரஸ்தா பிரயாணிகள் போக்கு வரத்து (6) துறைமுக, நதி போக்கு வரத்து ஆகியவைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழுக்கள்—பூரண சம்மதத்தின் பேரில்தான் இந்த கூட்டு ஆலோசனை கவுன்சில் அமைக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட தொழிலாளர் யூனியன்களும் இக்கவுன்சில் அமைப்பதை வெகுவாக ஆதரித்துள்ளன. போக்கு வரத்து தொழிலாளர்கள் யூனியனின் பொதுக் காரியதரிசியான ஆர்தர் டீகின் பிரஸ்தாப கவுன்சிலில் கூட்டுக் காரியதரிசியாக இருக்கிறுர். சம்பளம், வேலை பற்றிய நிபந்தனைகள் ஆகியவைகளைத் தவிர்த்த இதர சகல விஷயங்களைப் பற்றி அபிப்பிராயங்களையும், தகவல்களையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள இக் கூட்டு ஆலோசனைக் கவுன்சில் தவருது அடிக்கடி கூடி வருகிறது. உதாரணமாக கடந்த வருடம் இக்கவுன்சில் விவாதித்த விஷயங்களுள் ரயில், ரஸ்தா போக்கு வரத்து இணைப்பு, ரயில்வேக்கு சப்ளை செய்யப்படும் நிலக்கரியின் தரம், புதிய வண்டிகள், தொழிலாளர்களுக்காண ஹோட்டல், ஜாகை வசதிகள் பற்றியவையும் அடங்கியிருந்தன. வழக்கமான கூட்டங்களைத் தவிர மேற்படி கவுன்சில் சில சமயங்களில் விசேஷ மகாநாடு ஒன்றும் நடத்துகிறது. இம் மகாநாட்டிற்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர் யூனியன்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு சகல விஷயங்களையும் மானேஜ்மெண்டுடன் மனம் விட்டு விவாதிக்கின்றனர்.

இந்த கூட்டு ஆலோசனைக் கவுன்சில் என்பது சகல போக்கு வரத்து சர்வீசுகளுக்குமான ஒரு மத்திய உறுப்பாகும். என்றுலும் இதுபோன்ற கூட்டு ஆலோசக உறுப்புகள் ஒவ்வொரு சர்வீசுக்கும் தனித்தனியாக வேறு அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக ரயில்வே போக்கு வரத்து சர்வீசுகளுக்

தென கூட்டு ஆலோசக கமிட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. இக்கூட்டு ஆலோசக கமிட்டியில் ஸ்தல நிர்வாக அதிகாரிகள், சூபர்வைஸர்களும், சிப்பந்திகளினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் இருக்கின்றனர். யூனியன் சம்பந்தப்படாத விஷயங்கள் எல்லாம் இக்கமிட்டிகளில் விவாதிக்கப் படுகிறது. உதாரணமாக ரயில்வே நிர்வாகிக்கும் ஒரு குறிப்பிட்ட கொள்கையை அமல் செய்ய நினைக்கிறதென வைத்துக் கொள்ளுங்கள். அந்த யோசனைகளை நிர்வாகக் குழு கூட்டு ஆலோசக உறுப்பு மூலம் சிப்பந்திகளின் அபிப்பிராயத்தை அறிய விவாதிக்கும். பிரிட்டிஷ் ரயில்வேக்கள் திறமையாக வேலை செய்ய இந்த ஆலோசக முறை பயனுள்ள ஒரு அம்சமாகுமென ரயில்வே தொழிலாளர் யூனியன்களும், நிர்வாகக் குழுவும் விடுவித்துள்ள ஒரு சுற்றறிக்கை கூறுகிறது. ரஸ்தா போக்குவரத்து சர்வீசிலும் இதுபோன்ற கூட்டு ஆலோசக உறுப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1949-ம் வருட மத்தியில் ரஸ்தா போக்கு வரத்து நிர்வாகக்குழுவுக்கும், சம்பந்தப்பட்ட தொழில்ாளர் யூனியன்களுக்குமிடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் கீழ் மூன்று கூட்டுஆலோசனை உறுப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதைத்தவிர தேசிய சிப்பந்திகள் கவுன்சில் ஒன்றும் இருக்கும்.

இத்தியாதி கூட்டு ஆலோசக உறுப்புகள் மூலமாக பிரிட்டனின் தேசிய மயமான போக்கு வரத்து தொழிலில் தொழிலாளி-மானேஜ்மெண்ட் நல்லுறவுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

வட இங்கிலாந்திலுள்ள ஸ்டாக்போர்ட் நகரிலிருக்கும் ஒரு கம்பெனிக்கு பெய்லி பாலங்களை—யுத்த காலத்தில் ஜெர்மனியர் வாராவதிகளை உடைத்தெறிய முற்பட்டதால் அதை சமாளிக்க வேண்டி பிரிட்டிஷ்காரர்கள் கண்டுபிடித்த நூதன பாலம்—தயாரித்து விற்பனை செய்ய உலக உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கிறது. எதிர்பாராத வாராவதி சரிவுகளாலோ அல்லது வெள்ளத்தினுல் பாலங்கள் அடித்துகொண்டு போகப்பட்டாலோ சில மணி நேரத்தில் இப்புதிய பெய்லி பாலத்தை அமைப்பது சாத்தியமாகும். இதை உபயோகிப்பதிலுள்ள மற்றொரு நன்மை என்னவெனில் இதை அமைப்பதற்கு எவ்வித கைத்தேர்ந்த வேலைக்காரர்கள் தேவையில்லை. அதிக செலவில் சாதாரணமானதொரு வாராவதி கட்டுவதற்கு முடியாதிருக்கும் பட்சத்தில் குறைந்த விலையில் ஒரு சாஸ்வதமான பெய்லி பாலத்தை கட்ட இயலுகிறது. எற்கனவே பல நாடுகள் தம் தேவைக்கான பாலங்களுக்கு இக்கம்பெனியிடம் ஆர்டர்கள் கொடுத்திருக்கின்றனவாம்.

உஷார்!

ஸ்டார்ட் பண்ணறதுக்கு முன்னே கவனி தம்பி!



"பாத்தியா! அவசரப்பட்டியே. நட்டு கழண்டு மூக்கைப் பேத்துாட்டதே!"

18. தேவானை திரும்புகிறாள்

தேவானை எலும்பும் தோலுமாய்த் தென்பட்டாள். பத்து நாள் ஜுரத்தில் அவள் உடம்பு பாதியாய்க் கரைந்து போய் விட்டது. மாசிலாமணி அவள் கையைப் பிடித்துப் பார்த்தார். என்னைப் பார்த்தார். "நல்ல ஜுரம் அடிக்கிறது" என்று கவலையுடன் சொன்னார்.

"பத்து நாளா இதே காச்சலுதானுங்க. நாட்டு வைத்தியரு பெட்டியிலே இருக்கிற மருந்தையெல்லாம் எழைச்சிக் கொடுத்துப் பார்த்துட்டாரு!" என்று திருவேங்கட முதலியார் சொன்னதைத் தொடர்ந்து "நானும் எனக்குத் தெரிந்த கஷாயமெல்லாம் வச்சிக் கொடுத்தாச்சுங்க" என்று துயரம் தொனிக்கும் குரலில் பேசினாள் அன்னம்மாள்.

"உம்! நீங்கள் என்ன பண்ணுவீர்கள் பாவம்!" என்றார் மாசிலாமணி அவர்களைச் சமாதானப் படுத்தும் குரலில்.

"ஆஹா! எத்தனை நல்ல மனிதர் இவர்!" என்று நான் எனக்குள்ளாகவே வியந்து கொண்டேன். தேவானைக்கும் அவர் பேச்சு மிகவும் பிடித்திருந்தது என்பதைத் தெரிவித்தது அவள் முகம். எதோ பெரிய பாரம் நீங்கியது போன்ற பெருமூச்சு அவள் இதயத்தினின்றும் வெளியேறியது.

"அவுங்களுக்குக் கொஞ்சம் காப்பி கீப்பி வச்சிக் கொடு" என்றார் திருவேங்கட முதலியார் தமது மனைவியைப் பார்த்து.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நாங்கள் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தோம். இப்போது தேவானையைப் பட்டணத்துக்கு அழைத்துப் போய் வைத்தியம் பார்த்தால் நல்லது என்று நான் நினைக்கிறேன்" என்றார் மாசிலாமணி.

"எப்படி கூட்டிக்கிட்டுப் போறதுங்க. அன்னந் தண்ணியில்லாமே பத்து நாளா கெடக்குதே. வண்டியிலே போனா ஒடம்பு அலண்டு போவாதா?" என்றார் திருவேங்கட முதலியார்.

"வாஸ்தவந்தான்" என்றார் மாசிலாமணி.

"பட்டணத்திலிருந்து டாக்டரை இங்கேயே அழைத்து வந்து பார்க்கலாமே" என்று நான் சொன்னேன்.

"பட்டணத்திலிருந்து எந்த டாக்டர் இந்த ஊருக்கு வருவார்?" என்றார் மாசிலாமணி.

எனக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று. டாக்டர் உமாபதியை இந்த சந்தர்ப்பத்தில் நேரில் போய்ப் பார்த்துக் கேட்கலாம் என்று கருதினேன். அவர்

என் மாமனாரின் நண்பர். ரஜனி அவரைப் பற்றிப் பிரமாதமாக எழுதியிருக்கிறாள். அவர் எனக்காக வீடு தேடிக் கொடுக்கவும் இசைந்திருக்கிறார். தேவானையைக் குணப்படுத்தவும் அவரைப் பயன்படுத்திக் கொள்ளலாமே. பட்டணத்தில் நான் வசிக்கும் பேட்டையில் அவர் நல்ல கைராசிக்கார டாக்டர் என்கிற பெயரும் வழங்குகிறது. எனவே, நான் மாசிலாமணியிடம் அவரைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். முன்பின் தெரியாத எந்த டாக்டரும் இந்த ஊருக்கு வரமாட்டாரே என்று கவலைப்பட்டார். என் மாமனாருக்கு டாக்டர் உமாபதி மிகவும் வேண்டிய நண்பர் என்றும் அவர் என் பேச்சைத் தட்டமாட்டார் என்றும் ஒரு போடு போட்டேன்.

"உங்களுக்குத்தான் சிரமம்" என்றார் மாசிலாமணி.

"மாசிலாமணி! தேவானையின் விஷயத்தில் எனக்கு சிரமம் என்பதே கிடையாது," என்று உணர்ச்சியோடு பேசினேன் நான்.

"கண்ணுவுக்கு தேவானை இண்ணை உசிருங்க. ரெண்டு பேரும் ஒரு வவுத்திலே பொறந்திருக்கணும்; தப்பிப் பொறந்துட்டாங்க," என்று அன்னம்மாள் மெய்மறந்து பேசியதைக் கேட்டு மாசிலாமணியே மனம் உருகிப் போனார்.

"ஆம். கண்ணன்தான் என் கண்களைக் கூடத் திறந்தார்" என்று அவரையும் அறியாமல் பேசிவிட்டார். தேவானை அவரை ஏறெடுத்துப் பார்த்தாள் தன் படுக்கையிலிருந்தே. பின்னர் என்னைப் பார்த்தாள். "கண்ணு, நீ செய்த உதவியை நான் அறிந்துகொண்டேன்" என்று பேசுவதுபோலிருந்தது அவள் கண்ணொளி.

நான் பரவசமடைந்தேன். என்ன ஆனாலும் சரி, டாக்டர் உமாபதியைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தே தீருவது என்கிற உறுதி என் உள்ளத்தில் பிறந்தது.

"மாசிலாமணி! நான் இப்போதே புறப்பட்டுப் போகிறேன். டாக்டரை அழைத்துக்கொண்டு விரைவில் வருகிறேன்" என்று சொல்லி மற்றவர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினேன்.

ஊருக்கு வந்தவன் வீட்டுப் பக்கம் கூடப் போகவில்லை. தாய், தகப்பன், மனைவி எல்லோரும் வீட்டில் இருக்கிறார்கள். அவர்களை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்கிற எண்ணத்துடன் விரைந்தேன். பட்டணத்துக்குப் போய் நேராக டாக்டர் உமாபதியிடம் சென்றேன். அப்போது மாலை மூன்று மணிக்கு மேலாகி விட்டது. டாக்டர் தமது தொழில் அறையில் இருந்தார். சில நோயாளிகள் எதிரேயிருந்த பெஞ்சியில் அமர்ந்தனர். என் மாமனார் பெயரைச் சொல்லி என்னை அறிமுகப் படுத்திக்கொண்டேன் நான். அவர் என் கைகளைப் பிடித்து, ஆர்வத்துடன் ஆங்கில முறையில் குலுக்கினார். எனக்கு ஆசனமளித்துவிட்டுச் சற்றே இருக்கச் சொல்லி, வந்திருந்த நோயாளிகளைக் கவனித்து மருந்து கொடுத்து அனுப்பினார். பிறகு சாவதானமாக என்னுடன் பேசலானார். அவரிடம் என் அவசரத்தைச் சொன்னேன். என் நண்பர் ஒருவரின் மனைவி, எங்கள் ஊரில் படுத்த படுக்கையாயிருப்பதாகவும் அவர்தான் இத்தருணத்தில் உதவி செய்ய வேண்டும் என்றும் கூறினேன். அவர் சிறிது யோசித்தார். அதற்குள்ளாக அவரது குணங்களைப் பற்றி ரஜனி எனக்கு எழுதியிருந்ததை, என் மாமனார் என்னிடம் கூறியதாக அவரிடம் வர்ணித்தேன்.

"நான் சாதாரணமாக வெளியூர் கேஸ்களைப் பார்க்கப் போவதில்லை. இருந்தாலும் உங்கள் மாமனார் எனக்கு நெருங்கிய நண்பர். உங்கள் அழைப்பை நான் மறுக்க முடியாது" என்று தமது கொள்கையை என்னிடம் தெரிவித்து விட்டுப் பயணப் படலானார். ஒரு பெட்டியில் சில மருந்துகள், இஞ்சக்ஷன் கருவிகள், ஸ்டெதஸ்கோப், தெர்மாமிடர் முதலியவற்றை எடுத்து வைத்துக்கொண்டு "நான் ரெடி" என்று சொல்லி மேஜை மீதிருந்த மணியைத் தட்டினார். ஒரு பையன் வந்தான். காப்பி, பலகாரம் கொண்டுவரச் சொன்னார். ஐந்து நிமிஷங்களில் காப்பி பலகாரம் வந்து சேர்ந்தது. இருவரும் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டோம்.

நான் ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொள்ளலாம் என்றேன். அவர் தமது மோட்டாரிலேயே போகலாம் என்று சொல்லி



"இந்த ஆறவுன்ஸ் ரேஷன் காலத்திலே இத்தனை பெரிய ஜீவன்களுக்கு எங்கே தான் உணவு கிடைக்கிறதோ தெரியவில்லை."

விட்டார். இருவரும் மாலை ஐந்து மணிக்கு ஊர் போய்ச் சேர்ந்தோம். டாக்டர் உமாபதி தேவானையைப் பரிசோதனை செய்து பார்த்து ஒரு இஞ்சக்ஷன் கொடுத்தார். மருந்துகளும், மாத்திரைகளும் கொடுத்தார். சென்னைக்கு அவளை ஒரு டாக்ஸி வைத்து அழைத்துக்கொண்டுபோய் விட்டால் அடிக்கடி கவனித்து மருந்து கொடுக்கவும், விரைவில் குணப்படுத்தவும் சௌகரியமாயிருக்கும் என்று அபிப்ராயப் பட்டார். அவருடன் கூடவே நான் சென்னை திரும்பினேன். மறு நாள் காலையில் ஒரு டாக்ஸியைப் பேசி அமர்த்திக்கொண்டு ஊருக்குப் போனேன். அங்கே திருவேங்கட முதலியார், அன்னம்மாள் எல்லோரும் பிரயாணத்துக்குச் சித்தமாயிருந்தனர். பின் வீட்டில் தேவானையை அலக்காகப் படுக்க வைத்து அவள் பக்கத்தில் மாசிலாமணியும் அன்னம்மாளும் உட்கார்ந்துகொண்டனர். திருவேங்கட முதலியார் தமக்கு மோட்டார் புகை எப்போதுமே குமட்டல் வரும் என்றும் தாம் வண்டி கட்டிக் கொண்டு ரயிலுக்குப் போய் ரயிலேறி வருவதாகவும் சொல்லிவிட்டார். நான் வீட்டுப் பக்கம் போய்விட்டு வருவதாகக் கூறி விடை பெற்றேன். மாசிலாமணி, தேவானை, அன்னம்மாள் ஆகியவர்களுடன் டாக்ஸி 'பூம்பூம்' என்று ஒலித்தவண்ணம் கிளம்பியது. திருவேங்கட முதலியாரை ஏற்றிக் கொண்டு பின்னால் இரட்டைமாட்டு வண்டியும் புறப்பட்டது. அவர்களை வழியனுப்பிவிட்டு நான் என் வீட்டை நோக்கி நடந்தேன்.

19. ரஜனியும் தேவானையும்

என் தகப்பனார் ஊரில் இல்லை. மாடு பிடிப்பதற்காக சந்தைக்குப் போயிருந்தார். வர நாலைந்து நாள் பிடிக்கும் என்று தெரிந்தது. அம்மாதான் சொன்னாள். நான் திடீரென்று ஊருக்கு வர நேரிட்டதைப் பற்றி அவளுக்குச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ரஜனிக்கும், அம்மாவுக்கும் எல்லாம் முன்பே தெரிந்து விட்டது. சின்ன கிராமந்தானே? அதில் மோட்டார் வந்ததும், பட்டணத்திலிருந்து டாக்டர் வந்ததும் தெரியாமற் போகுமா? நான் வந்ததும் அதே மாதிரி தெரிந்துபோய் விட்டது. அம்மாவே சொன்னாள் "டாக்டருடன் நீ திரும்பிப் போய்விட்ட பிறகு நானும் ரஜனியும் போய் தேவானையைப் பார்த்து விட்டு வந்தோம். பாவம்! நல்ல பெண். இப்படிப் படுக்கையாய்ப் படுத்துவிட்டாளே!" என்று.

"டாக்டர் சொல்லுகிறார்; ரொம்ப ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று. தேவானைக்கு வேளா வேளைக்கு ஆகாரம், மருந்து எல்லாம் ஒழுங்காகக் கொடுக்க வேண்டுமாம். இதிலெல்லாம் அவள் தாயார் அன்னம்மாளுக்கு அனுபவம் போதாது," என்று நான் சொன்னேன்.

"தேவானை நேற்று நான் போயிருந்தபோது இதையேதான் சொன்னாள். 'ரஜனி! உன்னைப்போல ஒருத்தி இந்த சமயத்தில் பக்கத்தில் இருந்தால்....' என்று அவள் சொன்னபோது அவளுக்கே கண்ணீர் வந்து விட்டது" என்று ரஜனி பேசியதைக் கேட்டு நான் ஆச்சரியமடைந்தேன். ரஜனி நாசூக்காக என்னுடன் கிளம்புவதற்குத் தயாராயிருப்பதைத் தெரிவித்தாள். நானும் இந்த சமயத்தில் அவளை அழைத்துச் செல்ல விரும்பினேன். ஆனால் அம்மாவும், அப்பாவும் ஒத்துக்கொள்ள வேண்டுமே. அப்பாவோ ஊரிலேயே இல்லை.

அம்மா சிறிது நேரம் மௌனமாக யோசனை செய்தாள். பிறகு அவளாகப் பேசினாள்: "அப்பா வந்தால் நான் சொல்லிக் கொள்ளுகிறேன். நீ ரஜனியை அழைத்துக்கொண்டு போ. அன்னம்மாளும் சரி, தேவானையும் சரி தங்கமானவர்கள். இந்த சமயத்திலே அவர்களுக்கு ஒத்தாசை பண்ணுவது ரொம்ப அவசியம். ரஜனிக்கும் இது இஷ்டந்தான்" என்று அவள் சொன்ன க் கேட்டுப் புன்முறுவல் பூத்தாள் ரஜனி. என் தாயின் சாமர்த்தியத்தைக் கண்டு நான் வியப்புற்றேன். ஒரு கல்லில் இரண்டு மாங்காயை நொடியில் அடித்து வீழ்த்திவிட்டாள் அவள். ரஜனியின் பெண்ணுள்ளத்தை உணர்ந்த அவள் பெண்ணுள்ளம் என் விருப்பத்தையும் அறிந்து நடந்து கொண்டது. ரஜனியும் நானும் ஒரு மனப்பட்டு வாழ்க்கை நடத்துவதை விரும்பிய அவள் உள்ளம், சமயம் எப்படி வாய்க்கப் போகிறது என்று காத்திருந்தது போலும்!

மத்தியானம் சாப்பாட்டிற்குப் பிறகு ரஜனியும் நானும் புறப்பட்டோம். மாசிலாமணியின் வீட்டையடைந்தபோது ரஜனியின் வருகையைப் பார்த்து அனைவருமே திகைப்புற்றனர். அன்னம்மாளும், திருவேங்கட முதலியாரும் கனவில்கூட எதிர்பாராத நிகழ்ச்சி இது. தங்கள் பெண்ணுக்கு சிசுருஷை செய்து அவளைக் குணப்படுத்த ரொம்பப் படித்த உத்தியோகஸ்தர் பெண், பெரிய இடத்துப் பெண் ஒருத்தி தானாக விரும்பி வருவாள் என்பது அவர்கள் நம்பக்கூடிய நிகழ்ச்சியா?

மாசிலாமணி என்னை அப்படியே ஆலிங்கனம் செய்து கொண்டு கண்ணீர் பெருக்கிவிட்டார். "கண்ணன்! இந்த உதவியை

நான் என்றென்றும் மறவேன்" என்றார். அந்த மனிதருக்கு என் தேவானை—இப்போது அவர் தேவானைதான்—ஓர் அருமையான பொக்கிஷம் என்பது இப்போது தானே தெரிய ஆரம்பித்திருக்கிறது!

டாக்டர் உமாபதி ஒரு நாளைக்கு இரண்டு தடவை வந்து தேவானையைச் சோதித்து மருந்து கொடுத்துப் போனார். ரஜனியை அங்கே பார்த்த பிறகு அவருக்கு தேவானை விஷயத்தில் விசேஷமான அக்கறை ஏற்பட்டுவிட்டது என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

ரஜனி கண்ணுங் கருத்துமாக தேவானையைக் கவனித்து வந்தாள். வேளை தவறாமல் மருந்து, கஞ்சி, பழரஸம் முதலியன கொடுத்தாள். சடைப் பிடித்துப் போன அவளது கூந்தலை அவளுக்குச் சிறிதுகூட ஆயாசம் தட்டாதபடி வாரிப் பின்னி, அலங்கரித்தாள். அவள் படுத்திருந்த படுக்கையும், அவள் ஆடையும் எப்போதும் சுத்தமாக இருக்கும்படி பார்த்துக்கொண்டாள்.

அன்னம்மாளுக்கு ஆச்சரியம் பிடிபடவில்லை. இந்த மாதிரி எல்லாம் செய்ய வேண்டும் என்று அவள் கண்டாளா என்ன? "என்னம்மா! நீ கண்ணுவைக் கண்ணாலங் கட்டிக்கிறதுக்கு முன்னே எங்கேயாவது ஆசுப்பத்திரியிலே வேலை செஞ்சுக்கிட்டிருந்தியாம்மா? இவ்வளவு நல்லா செய்யறியே?" என்று கேட்கக்கூட கேட்டு விட்டாள்; ரஜனி அவள் அப்பாவித் தனத்தைப் பார்த்து சிரித்தாள்.

தேவானைக்கு நாளடைவில் ஜுரம் குறையத் தொடங்கியது. ஒரு வாரத்துக்குப் பிறகு ஜுரம் முற்றிலும் குணமாகி விட்டது. ரஜனி இரவு பகலாகக் கண் விழித்து அவளுக்குச் சிகிச்சை செய்தாள். அவள் சிரத்தையைப் பார்த்த எனக்கே அவளிடம் ஓர் அலாதியான மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டன.

மாசிலாமணியின் விருப்பப் பிரகாரம் நானும் அவர் வீட்டிலேயே வசித்து வரலானேன். ஒரு சமையற்காரனை அவர் அமர்த்தி விட்டார். ரஜனியும் என்னைப் போல் முற்போக்கு மனப்பான்மை கொண்டவள்தானே! அவளும் கூடவே தங்கி விட்டாள். இதெல்லாம் திருவேங்கட முதலியாருக்கும், அன்னம்மாளுக்கும் அதிசயமாக இருந்தன.

தேவானை எழுந்து நடமாட ஆரம்பித்தாள். டாக்டர் உமாபதி அவளுக்கு இனிமேல் மருந்து வேண்டாம் என்றும் நல்ல போஷாக்கு தரும் ஆகாரங்கள் தான் தேவை யென்றும் சொல்லிவிட்டார். அவள் பழையபடி பூர்ண பலத்தையடைந்து

பொலிவுடன் விளங்க விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டாள் ரஜனி.

அன்று ஞாயிற்றுக் கிழமை. ஆபீஸ் இல்லே. மத்தியானம் இரண்டு மணி இருக்கும். நானும் மாசிலாமணியும் ஹாலில் உட்கார்ந்து காப்பி பலகாரம் அருந்திக் கொண்டிருந்தோம். தேவானை வந்தாள். மாசிலாமணியைப் பார்த்து "என்ன ? ரஜனி ஒரு கதை சொல்லுகிருளே கேட்டீர்களா ?" என்ருள்.

"சொல்லு. கண்ணனும் கேட்கட்டும்" என்ருர் மாசிலாமணி.

புருஷனும் மனைவியுமாகச் சேர்ந்து முன்னமே நடத்திய ஒத்திகையை இப்போது அரங்கேற்றப் போகிருர்கள் என்று தெரிந்து விட்டது எனக்கு. நான் 'களுக்'கென்று சிரித்து விட்டேன்.

"அடடே ! அவருக்குத் தெரியும் போலிருக்கிறதே அந்தக் கதை ?" என்ருள் தேவானை.

"அவர் மனைவி அவரிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிருள்போலிருக்கிறது".

"என்ன தேவானை ! என் மேல் இல்லாததும் பொல்லாததுமாகச் சொல்ல முயற்சியோ ?" என்று கேட்டுக்கொண்டே ரஜனி வந்து சேர்ந்தாள்.

"இருப்பதைக்கூடச் சரியாகச் செல்லத் தெரியாமல் விழிக்கிறேனே !" என்று பரிதாபமாகக் கேட்ட தேவானையைப் பார்த்து எல்லோருமே சிரித்துவிட்டோம்.

அவள் சொல்ல வந்த விஷயம் இது தான். டாக்டர் சொன்ருராம் எனக்கும் ரஜனிக்கும் ஒரு புது வீடு பார்த்திருப்பதாக. ரஜனி தனிக் குடித்தனம் வைக்க ஆவலாயிருக்கிருள் என்பதைத் தனக்கு எப்படிச் சொல்வது என்று தெரியவில்லையாம்.

உடனே ரஜனி அவளைச் சுலபமாக மடக்கி விட்டாள், "நானும் என் கணவரும் பானகத் துரும்புபோல் இங்கே இருக்கிறோமே என்று நினைக்கிருய் போலிருக்கிறது" என்று. மாசிலாமணியும் தேவானையும் இதைக் கேட்டு நகைத்தனர்.

இப்போது அந்த வீட்டில் எங்கள் நாலு பேரையும் தவிர சமையற்காரன் மாத்திரம் தான் இருந்தான். தேவானைக்குப் பூர்ண குணம் ஏற்பட்டு நடமாட ஆரம்பித்த பிறகு திருவேங்கட முதலியாரும் அன்னம்மாளும் ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

என் தகப்பனரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் என் கொள்கைகளையும் போக்கையும் ஆதரிக்கவில்லை என்பது அவர் கடிதத்திலிருந்து தெரிய வந்தது. அந்தக் கடிதத்தை நான் ரஜனியிடம் காட்டினேன். அவள் சிரித்துக் கொண்டே சொன்னுள், "அவர்கள் கிராமத்தில் வசிக்கிருர்கள். நமது நாட்டிலிருந்து ஜாதி, மத, பேதம் எல்லாம் சுதந்தர அரசியல் பிரகாரம் ஒழிந்துபோய்விட்டன என்பது அவர்களுக்குப் புலஞக இன்னும் கொஞ்ச காலம் பிடிக்கத்தான் செய்யும். இந்த மறு மலர்ச்சிக் காலத்தில் பழமைக்கும் புதுமைக்கும் நல்லுறவு பிறப்பதற்கு மனிதர்களிடத்தில் அசாதாரணமான பொறுமையும், தீர்க்க திருஷ்டியும், அகப் புரட்சியும் அவசியம்" என்று அவள் பேசியதில் நியாயமும் கற்றுத் தெளிந்த அறிவின் சுடரும் ஒளி வீசியது கண்டு என் உள்ளம் ஆனந்தமடைந்தது. அதற்கேற்ருப் போல் தேவானையே சொன்னுள் அவளைப் பற்றி; "கண்ணு ! நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. இவ்வளவு படிப்புடன் கூட இத்தனை அடக்கமும் நற் குணமும் கூடிய பெண் யாருக்கும் மனைவியாக வாய்ப்பது அரிது" என்று.

தேவானை ரஜனியை உணர்ந்து கொண்ட அளவு நான் உணரவில்லை என்பது அப்புறம்தான் தெரிந்தது. ரஜனியிடம் ஏற்கனவே, தேவானைக்கு அவள் சிகிச்சை செய்ய முன் வந்ததிலிருந்தே, ஒருவித பற்றுதல் ஏற்பட்டு விட்டது எனக்கு என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இப்போது அது பன்மடங்கு வளர்ச்சி பெற்று அவள் உள்ளத்தை நன்குணரும் படியான ஆற்றலையும் அளித்தது.

டாக்டர் உமாபதி தேடிக் கொடுத்த தனி வீட்டிலே ரஜனியும் நானும் புதுக் குடித்தனம் வைத்தோம். அம்மா வந்து ஒத்தாசையெல்லாம் பண்ணிக் கொடுத்தாள். அப்பா கிராமத்தைவிட்டு வரச் சரிப்படவில்லை என்று எழுதியிருந்தார். நானும் ரஜனியும் புதுக் குடித்தனம் தொடங்கிய செய்தியை அறிந்து என் மாமனர் தமது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார். அவர் என் தகப்பனருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாராம். "மாப்பிள்ளையும் பெண்ணும் சில காலம் பட்டணத்தில் தனிக் குடித்தனம் பண்ணி வாழ்க்கை நடத்தட்டும். எப்படியும் அவர்களுக்காக கிராமத்திலே ஒரு நல்ல திட்டம் நான் வகுத்துக் கொண்டிருக்கிறேன். இந்த வருஷத்துடன் நான் 'ரிடையர்' ஆகிவிடுவேன். கிராமத்துக்கு வந்து உங்களுடன் கலந்து ஆலோசித்து, குழந்தைகளின் எதிர் காலத்தை இருவருமாகச் சிறப்பாக அமைத்து விடுவோம்" என்று. இதை பற்றி அம்மா என்னிடம் சொன்னுள். "இன்னும் சில நாட்களில் பாரேன் ; இங்கே உன் அப்பாவும் மாமனும் சேர்ந்தாப்போல வரப் போகிருர்கள் !" என்று அவள் பெருமையோடு சொன்னுள்.

மாசிலாமணிக்கும் தேவானைக்கும் எங்கள் புதிய வாழ்க்கை மெத்த ஆனந்தத்தை அளித்தது. அவர்கள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து போனுர்கள். அவர்கள் வீட்டுக்கும் அடிக்கடி நாங்கள்

ல நாட்களுக்கு முன் தண்டையார்ப்பேட்டையில் புதிதாக மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலையை சென்னை முதல் மந்திரி ஸ்ரீ. பி. எஸ். குமார வாமி ராஜா திறந்து வைத்தார். மெட்டல்பாக்ஸ் கம்பெனியின் சென்னை மானேஜரான ஸ்ரீ. காக்ரேன் பார்னெட் அனைவரையும் வரவேற்று சென்னை கிளையின் தயாரிப்பு வேலைபற்றிக் குறிப்பாகப் பேசினர். மெட்டல்பாக்ஸ் கம்பெனி தலைவர் ஸ்ரீ. சிஸ்வேல் ஜோன்ஸ் மெட்டல் ாக்ஸின் சாதனைகளையும், அவசியத்தையும் பற்றித் தமது தலைமையுரையில் கூறினர். நகரப் பிரபலஸ்தர்களும், பத்திரிகைக்காரர் களும், வர்த்தக, தொழில் பிரமுகர்களும் திறப்புவிழாவில் பங்கெடுத்துக் கொண்டனர். தொழிற்சாலையை படத்திலே காணலாம்.

போய் வந்தோம். தேவானையும் மாசிலா மணியும் முன்னெல்லாம்போல மனம் வேறு பட்டு நிற்காமல் ஒற்றுமையாகவும், உள்ளன்போடும் தாம்பத்ய வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

அவர்கள் ஆனந்த வாழ்க்கை என் உள்ளத்திலும் இன்பத்தை அள்ளிச் சொரிந்தது. ரஜனியை நான் இப்போ தெல்லாம் ஏசுவதோ, ஏளனம் செய் வதோ கிடையாது. அதற்கு அவள் சந் தர்ப்பமளிப்பதும் கிடையாது. அத்தனை பக்குவப்பட்டுத தேர்ந்திருந்தது அவள் உள்ளம்.

இந்திராணியும் சிதம்பரமும் இப்போது ஊரிலேயே இல்லை. சிதம்பரத்துக்கு மாற் றலாகிவிடவே அவர்கள் வெளியூர் போய் விட்டார்கள். இந்திராணியின் நாகரிக வாழ்வைக் கண்டு சஞ்சலமுற்ற மாசிலா மணி, இப்போதெல்லாம் சொல்லுவார், "கண்ணன்! இந்திராணி தண்ணீரில் குழைத்து எழுதிய வண்ணச் சித்திரம். காற்றும், மழையும், வெயிலும், கால மும் அந்த சித்திரத்தை அழிக்க வல்லவை. ஆனல் ரஜனியோ எண்ணெயில் குழைத்து வரைந்த வண்ண ஓவியம். காலத்தால் அழிவுருத பொலிவும் பூரணத்துவமும் பெற்ற மனப்பான்மை அவளுடையது" என்று.

"இந்த இரண்டு சித்திரங்களுக்கும் 'ஒரிஜினல்' ஏதாவது இருக்கவேண்டு மல்லவா? அதுதான் தேவானை!" என்று நான் உள்ளூர எண்ணி மகிழ்வதை அவருக்குத் தெரிவிக்கவேண்டும் என்கிற ஆசைதான் எனக்கு. ஆனல் அந்த ஆசை மாத்திரமாவது என்னுடனேயே வாழட்டுமே!

முற்றும்.



முதலியன அங்கத்தினர்களால் செய்து காட்டப்பட்டன.

படங்களை இங்கே காணலாம்.

எதிர்ப்பக்கத்தில் இருகைகளாலும் கனத்தைத் தாங்கித்

வண்ணம் படுத்திருக்கும் ஒரு அங்கத்தினருக்கு புரொபஸர் ரா

புரிவதைப் பாருங்கள்.

துவைத்த தாமோதர முதலியாருடன் பாகையணிந்த திரு.
வும், புரொபஸர் ராபர்ட்ஸனும் சிற்றுண்டி அருந்துகிறார்கள்,

மானேஜர் மாலினோ பேசுகிறார்.

மானேஜருடன் ரொம்ப ஸ்வாரஸ்யமாக
ஆலோசனை செய்கிறார் ராபர்ட்ஸன்.

அங்கத்தினர்கள் ஆவலுடன் கவனி





இந்த துணியில் உள்ள கூடுதல் அம்சத்தை நீங்கள் காண முடியாது!



இந்த துணியில் ஒரு கூடுதல் அம்சம் இருக்கிறது. மற்ற எந்தத் துணியிலிருந்தும் இதை எடுப்பாக காட்டக் கூடிய அம்சம் அது. இதற்காக செலவு செய்யும் ஒவ்வொரு அணுவுக்கும் பலன் கிடைக்கும். உடுக்க உடுக்க 'ஆண்டு' வரும், பணத்துக்கு தக்க மதிப்பு தரும்.

இந்த துணியை அளந்து பார்த்தால்தான் இந்தக் கூடுதல் அம்சம் தெரியும். இந்த அம்சத்தை அளிக்கும் முக்கிய பொருள் கண்ணுக்குத் தெரியாது. சிறந்த ஆராய்ச்சிக்குப் பின்னர் கண்டறியப்பட்ட முறையைக் கொண்டு தயாரிக்கப்படும் துணியின் ஒவ்வொரு கெஜத்திலும் இந்தக் கூடுதல் அம்சம் இருக்கிறது. பக்கிங்ஹாம் அண்ட் கர்னாடிக் மில்களிலிருந்து வெளிவருகிறது இந்த துணி. அரிய ஆராய்ச்சியும் அற்புதமான முறையும் தான் பக்கிங்ஹாம் அண்ட் கர்னாடிக்கை இந்தியாவிலேயே சிறந்த துணிகள் தயாரிப்பாளர்களாகக் கீர்த்தி பெறச் செய்திருக்கிறது.

தி பக்கிங்ஹாம் அண்ட் கர்னாடிக் கம்பெனி லிமிடெட்,
சென்னை.

மானேஜிங் ஏஜண்டுகள் :—

பின்னி அண்ட் கோ (சென்னை) லிமிடெட்.

பேர் பிறந்தது!

'விஜயா'

அன்று என் பள்ளித் தோழி விமலா வருகிறாளென்ற பூரிப்பிலே வீட்டு வேலைகளை பரக்கப் பரக்கச் செய்து முடித்துவிட்டுக் குளித்தேன். தும்பைப் பூவைப் போன்ற வெள்ளையுடை உடுத்திக் கொண்டு, என் குங்குமச் சிமிழைத் தேடிக்கொண்டிருந்தேன்.

விமலா என்னோடு படித்தவள். நானும் அவளும் ஒன்றாய்ப் பரீட்சை எழுதித் தேறினோம். என் அப்பா 'விவரந் தெரிந்த' பிள்ளையைப் படிக்கவைக்கப் போவதில்லையென்று தீர்மானமாகச் சொல்லி என் கல்லூரிப் படிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். நான் எவ்வளவு மன்றாடியும் பயனில்லை. விமலாவின் வார்த்தைக்கும் அப்பா மதிப்புத் தரவில்லை. விமலா வருத்தத்தோடு என்னை விட்டுப் பிரிந்து கல்லூரியில் சேர்ந்தாள். அவ்வளவுதான். எங்கள் தொடர்புக் கம்பி தொங்கவிட்டு முடிவில் அறுந்தே போயிற்று. அவள் அப்பா வேலை மாற்றலாகி வெளியூருக்குப் போய்விட்டார். பிறகு அவர்களைப் பற்றிய தகவலேயில்லை. நானும் வெகு நாள் வரை எதிர்பார்த்து எதிர்பார்த்து முடிவில் சலிப்படைந்தேன்.

ஒரு வாரம் முன்பு; எப்படியோ விலாசந் தெரிந்து, அவர் மேல் பார்த்துத் தருவதாக எனக்கு ஒரு கடிதம் போட்டிருந்தாள் விமலா. என் விலாசம் அவளுக்கெப்படி தெரிந்ததென்பதே எனக்குப் புரியாத புதிராயிருந்தது! அவளும் அதைப்பற்றிக் கொஞ்சமேனும் எழுதாதது எனக்குப் பெருத்த ஆச்சரியத்தை யுண்டு பண்ணியது.

மணி ஐந்து. நானும் பின்னிக்கொண்டு, அவள் தந்த சிமிழைக் கையிலெடுத்தேன். டாக்ஸி வாசலில் நின்ற ஓசை கேட்டது. சின்னப் பையனொருத்தன் பெட்டி, படுக்கை, கூடை முதலியவற்றை உள்ளே கொண்டுவந்து வைத்தான். பூவும் மஞ்சளுமாய் வந்த விமலாவைக் கண்டதும் எனக்குப் பெரு மகிழ்ச்சி பிறந்தது. எடுத்த சிமிழைத் திறந்து "வா, விமலா" என்று வரவேற்றபடி திலகமிட்டேன். "நீ கொடுத்த சிமிழ்தான் இது" என்று பெருமிதமாய்ச் சொல்லிக்கொண்டே காபி போடப் போனேன்; விமலாவும் என்னைத் தொடர்ந்தாள்.

காப்பி குடித்தானதும், அவள் திருமணத்தைப் பற்றி விசாரித்தேன். கல்லூரிப் பேராசிரியரைக் காதலித்து மணஞ் செய்து கொண்டதாகவும், விடுமுறையில் அவர் சொந்த ஊர் போகவே அவள் என்னைப் பார்க்க வந்ததாகவும் கூறி முடித்தாள்.

தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை எழுந்தது. "வா, மீனா, அம்

மா வந்திருக்கா பாரு. இவதான் உனக்குப் படிப்பு சொல்லித்தரப் போரு ! கொஞ்சம் சிரி கண்ணு" என்று சொல்லிக்கொண்டே எழுந்து போய்க் குழந்தையை எடுத்தேன். ஒரு வருஷம் சரியாக நிரம்பாத மீனுவும் தன் பொக்கை வாயை அசைத்துச் சிரித்தது. விமலாவிடம் கொடுத்துவிட்டுப் பால் கொண்டு வந்தேன். விமலா, "இத்தனை அழகான குழந்தைக்கு மீனு லேனு என்று பெயர் வைத்திருக்கிருயே. வேறே பேரே கிடைக்கலேயா ? இந்த நாகரிக காலத்திலும் இந்தப் பேர் கிடைத்ததே அதைச் சொல்லு ? விஜயா, படிச்சும் இவ்வளவு கர்நாடகமாயிருப்பேனு நான் நினைக்கவேயில்லே !" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

எனக்கே கொஞ்சம் வெட்கமாயிருந்தது. இருந்தாலும் என்ன செய்வது ? அப்படிப்பட்ட பெயரைத் தேர்ந்தெடுக்கின்ற நிர்ப்பந்தத்துக்குச் சம்பவங்கள் இடங் கொடுத்தன. நடந்து போனவற்றின் நினைவலைகளெழுந்து என் மனத்தில் முட்டி மோதிக்கொண்டிருந்தன.

"உம், அதெல்லாம் கடவுள் சித்தம், விமலா. மனித முயற்சியைக் கடவுள் பரிசோதித்துத் தீர்ப்பளிக்கிருர். விதிக்கு வலிமை அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் எங்கோ இருந்த மீனுட்சி என் சகோதரியாகி திடீரென்று மறைய முடியுமா ? என்னுள்ளத்தில் புயலை வீச விட்டு என் முகத்தில் விழிக்காமல் மறைந்து விட்டாள்," என்று சொன்னதும் என் தொண்டையடைத்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டேன்.

என் கலக்கத்தைப் புரிந்து கொண்ட விமலா, "நீ என்னிடமிருந்து ஏதோ மறைக்கப் பார்க்கிருய். நீ கண்டிப்பாய்ச் சொல்லித்தான் தீர வேணும்" என்று சிறு குழந்தையைப் போலப் பிடிவாதம் பிடித்தாள். நானும் வேறு வழியின்றி அந்தப்" பேர் பிறந்த கதையைச்" சொல்ல ஆரம்பித்தேன்.

"நான், அவர், மாமி மூன்று பேர்தான் வீட்டில். முதல் ஜோரில் குடித்தனப் பம்பரம் நன்ருகத்தான் சுழன்றுகொண்டிருந்தது. நானும் அவரிடம் வாஞ்சையாகவே இருந்தேன். எங்குப் போனுலும் நாங்களிரண்டு பேராகப் போகவேண்டுமென்பது மாமியின் கட்டளை. நாங்களும் கிழித்த கோடு தவருமலே சந்தோஷமாய்க் காலங் கழித்தோம்.

எங்கள் வாழ்க்கைப் படகு மூன்று வருஷங்களை நீந்திக்கொண்டு போய் விட்டது. எனக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லே. என்னைக் கோவில் குளத்துக்கனுப்பவோ, தம்பதிகளாகத் ஸ்தல யாத்திரை செய்யவோ அவர் விரும்பவில்லை. இதனுல் என்னை வைத்தியரிடம் அழைத்துப்போவதில் மாமி ஒரு நாளும் பின் வாங்கியதில்லே. செலவு கடன் சுமக்கும் அளவுக்கு அதிகரித்ததே யொழிய பலன் ஒன்றுமில்லே.

சீமைக்குப் போய்ப் பட்டம் பெற்ற டாக்டர் ஒருத்தரிடம் ஒரு நாள் போனேம். அவருடைய தீவிர பரிசோதனையின் முடிவாக "இளம் வயது. குழந்தை பிறக்கக் கூடும் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது. ஆனுல் குழந்தையே பிறக்காது என்று சொல்லுவதற்குத்தான் ஆதாரம் ஒன்று மில்லே," என்று சொல்லி வழி காட்டினுர்.

மாமியினுடைய கொந்தும் சொற்களுக்குத் தடையுத்தரவு போடுவதற்காவது ஒரு குழந்தை பிறக்கக் கூடாதா என்று எங்கினேன். எனக்குக் குழந்தை பிறக்கவில்லே. அதனுல் நான் என்ன செய்ய முடியும் ? மாமியின் வாயும் சதா முணுமுணுக்கத் தொடங்கியது. எனக்கு வீடே விஷமாய்த் தோன்றியது. அவருக்காகப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஒரு நாள் ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். நான் சமையல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தேன். அவர் படிக்கும் புத்தகங்களில் ஏதாவது ரஸிக்கத்தகுந்த பகுதியிருந்தால் அதை என்னிடமும் வெகு அழகாக எடுத்துச் சொல்லுவார். நானும் பொருளறிந்து அனுபவிப்பேன். அதில் அவருக்குச் சொல்லி முடியாத சந்தோஷம் !

அன்று என்னை அருகில் அழைத்து, "விஜயா, குழலும் யாழும் மழலைச் சொற்கள் கேளாதவருக்கு மிகவும் இனிமையாய்த் தோன்றுமாம்," என்று சொன்னதும் எனக்கு ஒரு வித கலக்கம் உண்டாகியது. அவர் தவறுபடச் சொல்லியிருக்க மாட்டாரென்பதாக எண்ணி ஆறுதல் செய்து கொண்டேன். இருந்தாலும் என்னுள் ஏதோ உறுத்திக்கொண்டேயிருந்தது. மாமியினுடைய குத்தலான பேச்சு அதற்குத் துணை செய்தது ! அவளுடைய சிடுசிடுப்பான சகவாசத்தை எப்போது தலை முழுகித் தொலைவோமென்றிருந்தது !

"ஆமாம், கொள்ளி வைக்கப் பிள்ளையில்லாதவனுக்குப் பின்னே என்னமாத் தோனும் ? இவளுக்கு இனிமே குழந்தை பிறக்குதுன்னு யார் கண்டா ? ஏதோ என் மூச்சிருக்கும்போதே ஒரு குழந்தையைக் கண்ணுலே பார்த்துட்டேன்னு போதும். கோடி வீட்டுச் சங்கரய்யர் பொண்ணு மூக்கும் முழியுமா நன்னு இருக்கா. ... ஒன்னேடோ ஒன்னு இருந்துட்டுப் போவுதுன்னு சொல்லிருக்கேன். அவரும் பார்ப்போமின்னுர்" என்று அஸ்திவாரம் போட்டாள் மாமி.

எப்போதும் மாமி சொன்னதை அவர் கேட்டதேயில்லை. இரண்டாந்தாரம் என்ற பேச்சை எடுத்தாலே எரிந்து விழுவார். "அவளுக்கு என்னவாம் ? குழந்தே யில்லேன்னு தொல்லே விட்டது. இரண்டாந்தாரம் வேறே பண்ணிக்கிட்டுத் தெரு சிரிக்கணும் போலிருக்கு" என்று அனுவசியமாய்ப் பேசித் தடையுத்தரவு போட்டு விடுவார். மாமியும் அடங்கிப் போவாள். அப்படியப்பட்டவர், "பார்ப்போம், செய்து கொள்ள வேண்டியதுதான்" என்று ஒத்துப் போகும் தோரணையில் பேசியது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. பொறுக்க முடியாத பெரும் பாரத்தைச் சுமப்பதுபோலிருந்தது. இளம் உள்ளத்தைச் சம்மட்டியால் அடிப்பதுபோல உணர்ந்தேன். நான் பதிலொன்றும் பேசவில்லை.

அவர் அன்று முதல் என்னிடமும் அதிகமாய்ப் பேசுவதில்லை. சாப்பாடு போட்டால் போதுமென்பதற்குப் பதிலாக, கையைக் காட்டுவார். நாளடைவில் இரவு பத்து மணிக்கு வீடுவர ஆரம்பித்தார். சில நாட்களில் வீட்டுக்கு வருவதையும் மறந்து விட்டார்..

ஒரு நாள் இதைப் பற்றி மாமி கேட்டு விட்டாள்.

"இந்த காலத்திலே நாலுபேருக்கு கெளரமாயிருக்கிறது பிடிக்கலேன்னு வீட்டோட இருக்கறேன் உங்க அழகைப் பார்த்துக்கிட்டு. வேலை கிடைக்காத காலத்திலே மணிக்கணக்கைப் பார்த்துக்கிட்டு வேலை செய்ய முடியுதா ? நம்ம தலையெழுத்து" என்று கடிந்து கொண்டார்.

இந்தத் திடீர் மாறுதலின் காரணங்கள் யாருக்கும் விளங்கவில்லை. நான் அவரிடம் பேச வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிட்டேன். மனித யந்திரமாய்க் கடமையைச் செய்து வந்தேன். எனக்கு உடம்பு இளைக்க ஆரம்பித்தது. பல மாதங்களான பிறகும் இந்த மௌன வாழ்க்கையில் மாறுதல் எதும் நிகழவில்லை.

அன்று மாசப் பிறப்பு ; கடன் தொல்லையிலிருந்து விடுபடும் நாள். அவர் பொழுதோடு வீட்டுக்கு வந்திருந்தார். மலர்ந்த முகத்தோடு இங்கு மங்கும் அலைந்துகொண்டிருந்தார் ; நிலை கொள்ளாது சந்தோஷத்தால் தவித்துக்கொண்டிருந்தார்.

நான் மேல் மாடிக்குப் போய் உட்கார்ந்து கொண்டேன். வாழ்க்கையில் தோன்றி மறையும் இன்ப துன்பங்களுக்குத் துணை புரியும் வெண்ணிலவை நோக்கிய வண்ணம் பழைய நிகழ்ச்சிகளை நினைவு படுத்திக் கொண்டேன்...........

திடுமென என் எதிரில் வந்து நின்று குனிந்து என்னிரு கைகளையும் பிடித்து அணைத்துக் கொண்டார். எனக்குச் சொல்ல முடியாத சந்தோஷம் பெருமிதமும் தோன்றியது. அரித்துத் தூண்டிக்கொண்டிருந்த வேதனை குறையத் தொடங்கியது போல உணர்ந்தேன். கனவு கண்ட சுவர்க்க வாழ்வு கிட்டிவிட்டது போன்ற பிரமை ஒரு கணம்.........

என் குனிந்த தலையை நிமிர்த்தி, அரும்பிய வியர்வையைத் துடைத்தார். "விஜயா உன்னை ஒன்று கேட்கிறேன் : பதில் சொல்ல வேண்டும்" என்று அவர் கேட்டார். கெஞ்சும் பாவனையை எதிரொலித்தது அவர் குரல்.

ஏதோ சிறு பிள்ளைத்தனமான கேள்வி என்று சிரித்துக்கொண்டே "உம்" என்று தலையசைத்தேன்.

"நான் இரண்டாவது கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானித்துவிட்டேன் ; இனி யார் மறுத்தாலும் நிறுத்த முடியாதென்கிற நிலைமையிலிருக்கிறேன். நீ சம்மதி" என்ற அவருடைய சொற்களைக் கேட்டதும் உள்ளமே உடைந்துவிடும் போலத் தோன்றியது. பெண்மையின் சகிப்புத் தன்மையை பயன்படுத்திக் கொண்டு சும்மா இருந்தேன். பதில் சொல்ல முடியாமல் எனக்குத் தொண்டையடைத்து விட்டது. உள்ளக் குமுறலுக்குக் கண்கள் வழி விட்டன. விறுவிறுப்புடன் கீழே இறங்கிவிட்டேன்.

இரண்டு நாட்கள் நான் சாப்பிடவில்லை, இல்லை, எனக்குச் சாப்பாடு கொள்ளவில்லை. ஜோடிக் குயில்கள்போல, சந்தோஷமாய் வாழ்ந்து வந்த எங்களைப் பிரித்துவைத்து

ஒரு கிராமத்தில்—



"அம்மா, ஒரு பிடி அரிசி போடம்மா !"

"ரேஷனிலே ஒரு பிடி அரிசி கெடச்சு நாலு வாரமாச்சு, வேணுமானல் கார்டைத் தரேன். போய்ப்பாரு. உனக்காவது ஒரு பிடி அரிசி கெடைக்குதா என்று.

வேதனை யுண்டாக்க யாரோ ஒருத்தி வருகிறாளென்பதை எண்ணிப் பார்க்க எனக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. என்னுடைய வாதமெல்லாம் வீணாய்ப் போகுமென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால் நான் முயற்சி செய்யாமலிருந்தேன்.

எப்படியோ நாலைந்து நாட்கள் ஓடிவிட்டன. ஒரு நாள் மாலை அம்மாவும் பிள்ளையும் கூடத்தில் உட்கார்ந்திருந்தனர். "நான் இரண்டாந் தாரம் செய்து கொள்ளறதாத் தீர்மானிச்சுட்டேன். பெண்ணும் பார்த்தாச்சு," என்று அவர் சொன்னதும் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தாள் மாமி. "எங்கேடாப்பா, குலம் கோத்திரமெல்லாம் நல்லது தானா?" என்று வைதிகத்தின் எதிரொலியாய் முழங்கினாள்.

"குலமுமில்லை, கோத்திரமுமில்லை. நீ சொல்லற மாதிரியிலே அவ வேறே ஜாதி. அவளைத்தான் நான் கட்டணும்," என்று சுருக்கமாய்ச் சொன்னார்.

"அப்புறம் நாம் ஒரு நல்லது பொல்லதிலே யாரோடவும் ஒற வாட முடியாது தெரியுமில்லே. இவ ஒருத்தி இருக்கும் போது இன்னொருத்தியைக் கட்டிக் கொண்டு இரண்டு பேருக்கும் சவரக்ஷணை பண்ண உன் சம்பாதனை போதுமான்னு யோசிச்சுப் பாரு" என்று சொல்லிவிட்டு, பார்வையை என் பக்கம் திருப்பினாள்.

நான் மௌனமாயிருந்தேன்.

"நான் அவளைவிடவே முடியாது; சத்தியம் செய்து கொடுத்திட்டேன். அவளாலே நமக் கொண்ணும் கஷ்டமில்லை. எல்லாம் அவளே செய்து கொள்ளுவா" என்று அவளைப் பற்றிப் பிரஸ்தாபித்து விட்டு வெளியில் போய் விட்டார்.

மாமி இடிந்து போய் உட்கார்ந்தாள். தன்னுடைய உறவினர்கள் சட்டை செய்யமாட்டார்களென்கிற வருத்தம் அவளை உறுத்திக் கொண்டிருந்தது. "ஏண்டி, அவன் என்ன திடீர்னு இப்படி மாறிப் பிட்டான். நீ ஏதாவது சொல்லி அவனைச் சரிப்படுத்தேண்டி" என்றாள் என்னிடம்.

"என்னாலே ஒன்னும் முடியாது. பட்டுத்



தேறட்டும்" என்று வெறுப்போடு சொன்னேன்.

பிறகும் ஒரு வாரம் ஓடியது. நான் அண்ணனுக்குக் கடிதம் போட்டிருந்தேன். எனக்கு இங்கிருக்கப் பிடிக்கவில்லையென்றால் உடனே புறப்பட்டு வரும்படி எழுதியிருந்தார். நான் தீர்க்கமாய் யோசித்தேன். மணந்த கணவனை விட்டுவிட்டு ஆயிரம் சுகங்களோடு வாழாவெட்டி என்ற பட்டத்தோடு வாழ்வதைக் காட்டிலும், கோடி கோடி துன்பங்களுக்கிடையில் "சகிப்புத் தன்மை யுள்ளவள்" என்ற தகுதியோடு கணவன் வீட்டில் காலங் கழிப்பது மேல் என்ற முடிவுக்கு வந்தேன். நான் தற்போது வர விரும்பவில்லையென்றும், அவர் கலப்பு மணம் செய்துகொள்ளப் போகிருரென்றும் எழுதிவிட்டேன்.

அவ்வளவுதான். பட்டுக் கத்தரித்தது போல் தாய் வீட்டுத் தொடர்பு அற்றுவிட்டது. நித்திய தரித்திரமாய் இருந்தாலும் பிறந்த வீட்டுக்குப் போய் வந்தால்தான் எந்த நாட்டுப் பெண்ணுக்கும் திருப்தி. நான் அந்த பாக்கியத்தையும் இழந்துவிட்டேன்!

ஒரு நாள் என்னை நெருங்கி அவருடைய இரண்டாவது கல்யாணத்தைப் பற்றி என் அபிப்பிராயங் கேட்டார். "எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை" என்று சொன்னேன் நான்.

உடனே ஆவேசம் வந்தவர் போல "உன் மாங்கல்யம் இன்னும் கொஞ்ச காலம் இருக்கும்படி பார். அவளை நான் இனி மேல் கைவிட முடியாது. உன் மனது திடப்பட்டிருக்கும் என்று நான் நினைத்தேன்; இன்னும் நீ சரியாகவில்லை. அவளால் நீ அடையப் போவதெல்லாம் நன்மைதான். வாழ்க்கையில் அவள் உன்னோடு போட்டிபோட வந்தவளல்ல, உன் சுக துக்கங்களைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டு உனக்குத் துணை செய்ய வரும் சகோதரி என்று எண்ணிக்கொள். நான் மாறிவிட்டதாயெண்ணி மனம் வருந்தாதே. உண்மையான அன்பு என்றும் மாருது. நீ தைரியமாய் ஒத்துக்கொள்" என்று கூவினர்.

எங்களிடையே சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிறகு நான் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு "செய்யுங்கள்" என்றேன்; என் குரல் நடுநடுங்கியது. அவள் அவரோடு காரியாலயத்தில் வேலை செய்பவளென்பதை மட்டும் அறிந்து கொண்டேன்.

மறு நாள் அவளை அழைத்துக்கொண்டு வந்தார். மெல்லிய கொடி போன்ற மேனி. சிரித்த முகம். வீண் டம்பமில்லாத உடை; குடித்தனம் செய்ய யோக்கியதையுள்ள நடை. அவளைக் கண்டதும் எனக்கு அன்புதான் தோன்றியது. அக்கா என்று என்னை அழைத்ததும் என்னுடல் புல்லரித்துப்போய் விட்டது.

எங்களுடைய சந்தோஷ வாழ்வு கங்கு கரையில்லாமல் புரண்டோடியது. அவள் வேலை முடிந்து வீட்டுக்கு வந்த பின்னர் எங்கும் நாங்களிருவராகவே போனோம். சினிமாவுக்கு, கடைத் தெருவுக்கு, வீட்டுக்கு நாங்களிருவர்! நாங்கள் இவ்வளவு ஒற்றுமையாயிருந்ததில் அவருக்குப் பெருமிதம்!

பிறந்தகத்திலிருந்து யாரும் வரவில்லை. யாரும் வருவதற்குப் பிரியப்படவில்லை. என்னுடைய வருத்தமும் பிரிவும் அவர்களுக்குப் பெரிதாய்த் தோன்றவில்லை. எங்கள் வீட்டுக்கு வருவதால் எங்கே அவர்களை இந்த உப்பில்லாத உறவினர்கள் ஜாதியை விட்டு விலக்கிவிடுவார்களோ என்ற பயந்தான் முக்கியத்துவம் அடைந்தது!

நாங்கள் நெருங்கிப் பழகினோமே தவிர, உண்மையில் எனக்கு உள்ளூரப் பொருமை புகைச்சலிட்டுக்கொண்டுதானிருந்தது! காரணமில்லாத வெறுப்பு அவள்மீது எனக்குத் தோன்றியது.

அவளுக்கு ஊரிலிருந்து கடிதம் வந்தது; அம்மாவுக்கு அதிக காயலாவென்றும், மீனுட்சிமேலேயே உயிர் இருக்கிறதென்றும் கண்டிருந்தது. அந்தச் சமயத்தில் வீட்டில் அவருக்கும் உடம்பு சரியில்லை. மீனு ஊருக்குப் புறப்பட்டு விட்டாள். போகும்போது சொல்லிக்கொள்ள வந்தவள், "அக்கா அவர் உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்குங்க; எவ்வளவு கடனுனாலும் பாதகமில்லை. நான் சம்பளம் வாங்கியதும் கொடுத்துவிடுகிறேன். பத்திரம், பத்திரம்" என்று விடை பெற்றுக் கொண்டாள்.

'கடனுனாலும் பரவாயில்லை; சம்பளம் வாங்கித் தருகிறேன்' என்ற அந்த வார்த்தைகளை நினைக்க நினைக்க எனக்கு ரோஷம் பொங்கியது. எங்கோ கிடந்தவள், என் கணவனோடு எப்படியோ சேர்ந்தாள். இன்று என் கணவனுக்கு வேண்டியவற்றைச் செய்வதற்குப் பணம் கொடுக்கிருளாம். என்னை வேலைக்காரி என்றெண்ணிவிட்டாளா? அம்மி மிதித்து அருந்ததி பார்த்தவளா அத்தனை அகங்காரமாய்ப் பதில் சொல்ல? என்றெல்லாம் நினைத்து வருந்தினேன்.

அவள் என்னை விட்டுப் போனதே எனக்குப் பெரும் ஆறுதலாயிருந்தது. கூண்டிலிருந்து விடுபட்ட பறவையைப் போலக் களிப்படைந்தேன்.

மீனு ஊருக்குப் போனதும் ஒரு கடிதம் போட்டாள். அதில் தன்னை விவாக ரத்து

செய்து கொள்ளும்படியும், தாரமிழந்த அத்தானை மணந்து கொள்ளும்படியும் உறவினர்கள் சொல்வதாயும், தனக்கு உடம்பு சரியில்லாததால் ஆஸ்பத்திரியில் இருப்பதாயும் எழுதியிருந்தாள்.

என்னை யறியாமலே அவளிடம் ஓர் அனுதாபம் பிறந்தது. அவளை எப்போது பார்ப்போமென்றிருந்தது எனக்கு. அவளை வரவேற்க நான் ஆசைப் பட்டேன். அவள் வரவேயில்லை. என் முகத்தைப் பார்க்க அந்த உத்தமி விரும்பவில்லை போலும்!

நான் கொடுத்து வைக்காத பாவி. என் நன்மைக்கும் உயர்வுக்கும் பாடுபட்டவளை நான் சரியாகப் புரிந்துகொள்ளாமல் வெறுத்தேன். அவளை வேம்பென்று கருதினேன். அகம்பாவமும் பொருமையும் என்னிரு கண்களையும் மறைத்துவிட்டது. எங்கோ பிறந்தாள், வளர்ந்தாள். என் இடைக்கால வாழ்வில் புகுந்து சீர் திருத்தம் செய்தாள். பிறகு மறைந்து விட்டாள்.

அவள் இறந்துபோகுமுன்பு எழுதிய கடிதம் எனக்குக் கிடைத்தது. ஆமாம் எனக்கே எழுதியிருந்தாள். தனக்கே உரித்தான அன்புக் குரலில் என்னைச் சகோதரி என்றழைத்திருந்தாள். அதில் தனக்கு முடிவு நெருங்கி விட்டதைத் தான் நன்குயுணர்வதாகவும், அநாதைப் பிணமாகப் போவதில் தனக்கு எவ்விதக் கவலையுமில்லையென்றும் எழுதியிருந்தாள். அதனோடு அவளுக்குள்ள சொத்துக்களையெல்லாம் எனக்கும் என் குழந்தைக்குமாகப் பங்கிட்டு வைக்கப்பட்டிருப்பதைக் காட்டும் உயிலும் வந்திருந்தது. நான் சிறுபிள்ளைபோலக் கதறிவிட்டேன். கடைசியாக ஒரு முறையேனும் அவளைப் பார்க்க வேண்டுமென்ற முடிவில் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தோம். அப்போது தான் அவளுடைய இறப்புச் சேதி எடுத்துக் கொண்டு ஓடி வந்தது பாழாய்ப்போன தந்தி.!

அவர் சித்தங் கலங்கி விட்டார். அவள் வருவாளென்று எவ்வளவோ ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். அவள் இறந்தாளென்றதும் அவர் கதி கலங்கிப் போனார்.

ஒரு மாதத்துக்கெல்லாம் மீனா பிறந்தாள். நான் மீனா என்று பேரிட்டதும் அவரே சிறிது ஆச்சரியமடைந்தார். மீனாவின் நினைவை அடிக்கடியுண்டாக்குமென்று சொல்லி மாமியின் பெயரை வைக்கச் சொன்னார். நான் ஒரே பிடிவாதமாயிருந்தேன். கடைசியில் நானே வெற்றி பெற்றேன்" என்று நான் முடித்தேன்.

விமலாவின் கண்களில் நீர் திரையிட்டது. "விஜயா, மீனாட்சி என் சகோதரி. அவள் ஆஸ்பத்திரியிலிருந்து வந்த போது, சிகிச்சை செய்த டாக்டர் ஒரு வாரத்துக்கு முன்பு எங்கள் வீட்டுக்கு வந்தார். மீனா அவரிடம் எல்லாம் சொல்லியிருக்கிறாள். அகஸ்மாத்தாக அவர் சொன்னபோதுதான் உன் விலாசத்தைக் கேட்டு தெரிந்து கொண்டேன்" என்று சொல்லி முடிக்கவும், அவர் வாசற் கதவைத் தட்டவும் சரியாயிருந்தது.

உலகத் தொழிலாளர் சம்மேளனம்

சர்வதேச சுதந்திர தொழிலாளர் சம்மேளனம் உலக முழுவதிலுமுள்ள ஒவ்வொரு பகுதியிலும் தொழிற் சங்க வளர்ச்சிக்கான மாபெரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போகிறது. இவை சர்வதேச தொழிற்சங்க சரித்திரத்திலேயே இணையற்றதாகும். உதாரணமாக இச்சம்மேளனம் ஆசிய அபிவிருத்திக்கென முதல் வருடத்தில் 50,000 பவுன் செலவிட உத்தேசித்துள்ளது. உடனடியாக தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சம்மேளனம் ஒரு உலக நிதி திரட்ட விசேஷ வேண்டுகோள் விடுக்கப்போகிறது.

சமீபத்தில் தான் சம்மேளனத்தின் நிர்வாக போர்டின் கூட்டம் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றது. சம்மேளனத்தில் தன்னை இணைத்துக்கொள்ளும்படி பாகிஸ்தான் விடுத்த விண்ணப்பத்தை போர்டு ஏற்றுக் கொண்டுள்ளது.

மண்டல ஸ்தாபனமொன்று அமைப்பது சம்பந்தமாக அடுத்தவருடகோடைகாலத்தில் கராச்சியில் மகாநாடு ஒன்று கூட்டுவதெனவும் பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது. இந்திய தொழிற் சங்கவாதி மங்கத் அவர்களைக் காரியதரிசியாகக் கொண்ட ஒரு காரியாலயம் தற்போது சிங்கப்பூரில் அடைக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர இந்தியா, ஜப்பான், அநேகமாக பிலிப்பைன்ஸ் நாடுகளில் மூன்று சாஸ்வத பிரதிநிதிகளும் நியமிக்கப்பட விருக்கின்றனர்.

பின் தங்கிய நாடுகள் பற்றிய பொருளாதாரக்கொள்கை அறிக்கை யொன்றையும் போர்டு கூட்டம் ஏற்றுக்கொண்டது.

அடுத்த இதழில்
புதிய தொடர்கதை
ஆரம்பம்.

கந்தக ஏரிகள்

கந்தகத்தை இயற்கை முறையில் பாக்டீரியாவைக் கொண்டு தயாரிப்பது பற்றி வெகு நாட்களாகவே ஆராய்ச்சிகள் விசேஷமாக நடைபெற்று வருகின்றன. என்றாலும் உதவக் கூடிய அளவில் உற்பத்தி செய்வதற்கான செய் முறையொன்று இன்னமும் உருவான பாடில்லை. இது பற்றி இந்தியாவிலும் பங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞானக் கழகம் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறதென்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

வட ஆப்பிரிக்காவில் உள்ள ஸைரினைகா, ட்ரிபோலிடானியா பாலைவனங்களில் சில அதிசயமான ஏரிகள் உள. ஏரிகளின் நீர் வெண்ணீலமாக இருக்கிறது. ஏரிகளைச் சுற்றிலும் விசாலமான சிவப்பு நிற கரையோரம் தென்படுகின்றது. ஏரிகளின் அடி பாகத்திலோ மஞ்சள் மஞ்சேளென்று துல்லியமான சேரின் சேர்க்கை காணப்படுகின்றது. இப்படி அசாதாரண விதத்தில் பல வர்ணங்களில் உருவாயிருக்கும் ஏரிகள் யாவும் இயற்கையின் விசித்திரமே. ஏரி ஜலத்தில் மொய்த்து வாழும் பாக்டீரியா கூட்டங்களின் விநோத விளையாட்டுதான் இதற்கெல்லாம் காரணம். ஏரி ஜலத்தில் உள்ள சல்பேட்டு உப்புகளை சல்பைடுகளாக மாற்றுகின்றன சில பாக்டீரியா வகை. மற்றொரு பாக்டீரியா இனம் சல்பைடுகளை கந்தகமாக்குகின்றது. மாவு போல் உள்ள இந்தக் கந்தகம்தான் ஏரிகளுக்கு கண்ணைப் பறிக்கும் வர்ணத் தோற்றங்களை தருகிறது.

சுற்றுப்புறம் வசிப்பவர்கள் இந்த இயற்கை செய் முறையை அறிந்து பிரதி கோடை காலத்திலும் தண்ணீர் வற்றிப்போயிருக்கும்போது ஏரிகளுக்கு வந்து கந்தகத்தை குவியல் குவியல்களாக திரட்டி எடுத்துப் போகிறார்கள். இவ்விதம் பிரதி வருடமும் சுமார் 200 டன் கந்தகம் ஏரிகளில் உற்பத்தியாகிறது.

அத்தியாவசியமான ரசாயன கச்சா பொருள்களில் கந்தகம்தான் அதிக அளவில் உபயோகப்படுகிறது. கைத்தொழில்களுக்கு வேண்டிய ரசாயனப் பொருள்களில் மிக்க உபயோகமான கந்தகமிலத்தை (Sulphuric acid) தயாரிப்பது கந்தகத்திலிருந்துதான். 1881-ம் வருடத்தில் பிரிஸ்டல் நகரைச் சேர்ந்த ஒரு திராட்சை ரஸ வியாபாரி கண்டு பிடித்த முறைப்படிதான் தற்போதும் லட்சக்கணக்கான டன்கள் கந்தகமிலம் தயாரிக்கப்படுகிறது. ரசாயன கைத் தொழில் உற்பத்திகளுக்கு கந்தகமிலம் மூலப் பொருளாக அநேகவற்றிற்கு விளங்குகிறது. அவைகளில் உரம், மருந்து வகைகள், சாயங்கள், வெடி குண்டுகள், தயாரித்தலும், பெட்ரோலியம் சுத்தப்படுத்தலும் முக்கியமானவையாகும்.

உலகம் பரவலாக கந்தகம் இயற்கையாக அகப்பட்டபோதிலும் அதை லாபகரமாக சுரங்கம் தோண்டி எடுக்குமளவில் இல்லை. அதனால் அநேக தேசங்கள் அயல்நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிகளைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. ஆகவே சுயமாக கந்தகத்தை தயாரிக்கும் வழி எதாவது தென்பட்டால் அது எவ்வளவு கவர்ச்சிகரமாக இருக்கும் ?

மேற்கூறிய கந்தகம் உற்பத்தி செய்யும் ஏரிகளைக் கண்டு பிரிட்டனின் ரசாயன நிபுணர்களுக்கு பாக்டீரியாவைக் கொண்டே ஏன் நாமும் கந்தகம் உற்பத்தி செய்யலாகாது ? என்ற கேள்வி பிறந்தது. இதைக் குறித்து ஆராய்வதற்கு பிரிட்டனின் ரசாயன ஆராய்ச்சி ஸ்தாபனம் (இது விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி இலாகாவின் கீழுள்ளது) சமீபத்தில் இரண்டு ரசாயன நிபுணர்களை அந்த ஏரிகளை பரிசோதனை செய்யவும், அங்கிருந்து மாதிரி பாக்டீரியா வர்க்கங்களை விரிவாகப் பரீட்சை செய்ய எடுத்துவரவும் அனுப்புவித்தது. அவர்கள் ஏரிகளின் தன்மைகளை வெகு துல்லியமாக ஆராய்ந்துவிட்டு இங்கிலாந்துக்கு பாக்டீரியா மாதிரிகளையும் சேகரித்து கொண்டு வந்தார்கள். அங்கு நிலவும் இயற்கை ஸ்தல சூழ்நிலையில் பிரதி வருடம் 5 லட்சம் காலன் ஏரித்தண்ணீரிலிருந்து சுமார் 100 டன் கந்தகம் உற்பத்தியாகிறதென தெரிவித்தார்கள். ஆனால் இந்தச் செய்முறையை லாபம் கிட்டும் விதத்தில் பயன்படுத்த 10 மடங்காவது துரிதமாக நடத்துவது அவசியம். அதிகமளவு கிடைக்கும் சாக்கடை கழிவு நீர்களிலிருந்து இதில் சல்பேட்டு உப்புகள் இருக்கின்றன—இப்பாக்டீரியாவைக் கொண்டு கந்தகம் உற்பத்தி செய்வதற்கு விசேஷ ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

உலகத்தின் இதர பாகங்களிலிருந்தும் கந்தக பாக்டீரியா இனங்களை ரசாயன ஆராய்ச்சி ஸ்தாபனம் தருவித்து அவற்றின் வளர்ச்சி, கந்தகம் உற்பத்தி செய்யும் திறன்போன்ற பல அம்சங்களை பரிசோதனை செய்து வருகிறது. இதுவரை நடத்தியுள்ள ஆராய்ச்சி

களிலிருந்து கந்தகம் பெருமளவில் தயாரிப்பதற்கான செய்முறை கூடிய சீக்கிரம் உருவாகலாம் என்று நம்பிக்கை தரும் வகையில் புலன் கிடைத்துள்ளது.

ஏற்கனவே பாக்டீரியா, மற்றும் இதர சூக்கும அங்க ஜீவிகளின் உதவியால் பல பிரதான ரசாயன பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக ஈஸ்டு எனப்படும் பாக்டீரியா இனம் மூலம் சர்க்கரை பானங்கள் புளிக்கச்செய்து அதிலிருந்து கைத்தொழிலில் அமோகமாக உபயோகிக்கப்படும் சாராயம் தயாரிக்கப்படுகிறது. இந்தச் சாராயம் வர்ணங்கள், மருந்துகள், பிளாஸ்டிக்குகள், சாயங்கள் போன்ற பல தயாரிக்க உதவுகின்றது.

வேறு சில சிறந்த உதாரணங்களும் உள. அசிடோன், அசீடிக், லாக்டிக் திராவகங்களும், மிக்க ஆற்றல் வாய்ந்த பெனிசிலின், ஸ்ட்ரெப்டோமைசின் என்ற பூஞ்சன மருந்துகளும் இயற்கை முறையில் தான் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் பட்டியலில் அதி விரைவில் கந்தகமும் இணைக்கப்படும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

இந்தியப் பிரதிநிதிகள் பிரிட்டன் விஜயம்

இந்தியா பாகிஸ்தானி தொழிலாளர் யூனியன் பிரிதிநிதிகள் பிரிட்டனுக்கு விஜயம் செய்வதற்காக ஆகும் செலவுக்கு பிரிட்டிஷ் கவுன்சில் (கலாசார ஸ்தாபனம்) 800 பவுன் கொடுக்கப்போகிறது. இத்தகவலை பிரிட்டிஷ் பொது மக்கள் சபையில் காமன்வெல்த் மந்திரி வெளியிட்டார். இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் தொழிலாளர் யூனியன் இயக்க வளர்ச்சிக்கு பிரிட்டிஷ் கவுன்சில் எவ்வளவு பணம் செலவிட்டுள்ளதென்று விங் கமாண்டர் புல்லுஸ் கேட்ட கேள்வியொன்றுக்கு பதில் அளிக்கையில் தான் காமன்வெல்த் மந்திரி மேற்கண்டவாறு கூறினர். "பிரிட்டிஷ் தொழிலாளர் யூனியன்கள் காங்கிரஸின் அழைப்பின்பேரில் இந்திய, பாகிஸ்தானி தொழிலாளர் யூனியன் பிரதிநிதிகள் பிரிட்டனுக்கு விஜயம் செய்யப் போகின்றனரென்றும், பிரிட்டிஷ் தொழிலாளர் யூனியன் இயக்க முறைகளை நேரில் கண்டறிவதே அவர்களின் நோக்கமென்றும், இதற்கான செலவில் தன் பங்காக பிரிட்டிஷ் கவுன்ஸில் 800 பவுன் கொடுக்கப் போகிறதென்றும்" காமன்வெல்த் உறவு மந்திரி மேலும் அறிவித்தார்.



அமெரிக்கத் தொழிலாளி தற்காப்பு முகமூடி, கையுறைகள், மூக்கு கண்ணாடிகள் முதலியவற்றுடன் வேலை செய்வதை படத்தில் பார்க்கலாம். உஷாராயிருந்தால் உடம்புக்குச் சேதமில்லை.

மரமும் செடியும்

மரங்களும், செடிகளும் உலகத்தின் ஒரு பகுதியிலிருந்து பிற பகுதிகளுக்குச் சென்று பரவிய வரலாறு பற்றிய ஆராய்ச்சி சமீபகாலத்தில்தான் ஆரம்பமாயிற்றென்ற போதிலும், மனிதர் குடியேற்றம் பற்றிய வரலாற்றைப் போலவே இதுவும் கவர்ச்சி நிறைந்ததாக இருக்கிறது. சில இடங்களில், மரம் செடிகளின் குடியேற்றத்தால் ஏற்பட்டுள்ள விளைவுகள், மனிதர் குடியேற்றத்தால் ஏற்பட்ட மாறுதல்களை விட அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

கொலம்பஸ் என்பவர் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னால், உருளைக்கிழங்கும், டொமடோவும், புகையிலையும், நிலக்கடலையும், சர்க்கரை வள்ளிக்கிழங்கும் இன்னதென்பதே பழைய உலக வாசிகளுக்குத் தெரியாது. கடலிலும், தரையிலும் வானிலும் துரிதமான போக்குவரத்து சாதனங்கள் ஏற்படவே, மரஞ் செடிகளும், பயிர்வகைகளும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு, வித்துக்களாகவும் பதியங்களாகவும் பெருமளவில் எடுத்துச் செல்லப்பட்டு வளர்க்கப்படலாயின. இவ்வாறாக, பிரயோசனப் படக்கூடிய பல பயிர்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு கிடைத்துள்ளன. வெளி நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட செடிகளைப் பயிர்செய்து செழிப்படைந்துள்ள நாடுகளும் பல உள்ளன.

உதாரணமாக, மேற்கு இந்தியத் தீவுகளிலும், அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலும் கரும்பு உற்பத்தித் தொழில் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு, அந்நாடுகளுக்கு இந்தியக் கரும்பு கொண்டுபோகப்பட்டதே காரணமாகும். கோதுமையை இதற்கு மற்றொரு உதாரணமாகக் கூறலாம். ரொட்டிக்கு உபயோகிக்கப்படும் கோதுமை முதன் முதலில் பாரசீக மலைப் பிரதேசத்திலும், ஆப்கானிஸ்தானத்திலும், வட மேற்கு இந்தியாவிலுமே உற்பத்தியாகிவந்ததாக இப்பொழுது நிச்சயமாகக் கூறப்படுகிறது. கோதுமைப் பயிர், முதலில் இந்தப் பிரதேசங்களிலிருந்து, ஐரோப்பிய நாடுகளுக்கும், ஆசியாவின் பிற பகுதிகளுக்கும் பரவியது. அங்கிருந்துதான் பிறகு அமெரிக்காவுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. ஆனால், இன்றோ, கோதுமை உற்பத்தியிலே அமெரிக்காவே முதன்மையாக விளங்குகிறது. சோயா அவரை அல்லது "அற்புத அவரை" என்று சொல்லப்படும் அவரையின் கதையும் இதுவேதான். ஆதியில், சீனாவிலிருந்தும் மஞ்சூரியாவிலிருந்தும் அமெரிக்காவுக்குக் கொண்டுபோகப்பட்ட இந்தச் செடி இப்பொழுது அமெரிக்காவிலே அமோகமாகப் பயிராகிவருகிறது. அமெரிக்காவிலிருந்து வந்த இரண்டு செடிகளில், இந்தியா, இலங்கை, மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகள் அதிக நன்மையடைந்திருக்கின்றன. ரப்பர் மரமும், கொயினா கொடுக்கும் சிங்கோனா செடியுமே இவ்விரண்டுமாகும்.

அமெரிக்காவின் உஷ்ணப் பிரதேசத்திலிருந்தும், தென் ஆப்பிரிக்காவிலிருந்தும் மெக்ஸிகோவிலிருந்துங்கூட, சில புஷ்பச் செடிகளும், பழச்செடிகளும் இந்தியாவுக்கு வந்திருக்கின்றன. ஆனால் இவை எல்லாமே நல்ல செடிகள் என்றும் சொல்லிவிடுவதற்கில்லை. கெடுதலான பல பூண்டுகளும் ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் பரவியிருக்கின்றன. மரஞ்செடிகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கு சரியான ஸ்தாபனம் எதுவும் இல்லாததே இதற்குக் காரணமாகும். இந்தியாவில் இப்பொழுது தொல்லை கொடுத்துவரும் பிரம்மதண்டம், உன்னி, குளவாழை ஆகிய பூண்டுகள் இம்மாதிரி வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து நுழைந்து கொண்டவையேயாகும்.

அமெரிக்கா, ரஷ்யா போன்ற முன்னேற்ற நாடுகளில், அன்னிய செடிகளை விஞ்ஞான முறைப்படி, அனுமதிக்கும்பொருட்டு, தாவர அனுமதி ஸ்தாபனங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்த ஸ்தாபனங்களில் பலவகைச் செடிகளும், பயிர்களும் சேகரித்து வைக்கப்பட்டு வளர்க்கப்பட்டுவருகின்றன. உயர்தரமான இனங்களைப் பொறுக்கியெடுப்பதன் மூலம், அல்லது, உற்பத்தி செய்வதன்மூலம் பயிர்களை அபிவிருத்தி செய்வதற்கான எந்தத் திட்டத்துக்கும் இத்தகையதொரு ஸ்தாபனம் இருப்பது மிக அவசியமாகும். இந்த ஏற்பாட்டின் பலனாக, இப்பொழுது அமெரிக்காவில் இந்திய மாம்பழங்களும், எகிப்திய பேரிச்சம்பழமும், பாலஸ்தின் ஆரஞ்சும் உற்பத்தி செய்யப்பட்டுவருகின்றன. கோயமுத்தூரில் கண்டுபிடிக்கப்பட்ட "கோ-281" ரக கரும்பு தென் ஆப்ரிக்காவில் அமோகமாக விளைந்துவருகிறது. இந்தியாவில் லாபகரமாகப் பயிர்செய்ய முடியாது என்று கருதப்பட்ட இந்த ரகக் கரும்பு இப்பொழுது தென் ஆப்பிரிக்காவின் முதல் தரக் கரும்பாகப் பிரசித்திபெற்றிருக்கிறது. தென்

ஆப்ரிக்காவில் சர்க்கரை உற்பத்திக்கு உபயோகிக்கப்படும் கரும்பில் சுமார் அறுபது சத விகிதம் இந்த ரகத்தைச் சேர்ந்ததே யாகும்.

இந்தியாவில் வெளிநாட்டுச் செடிகளை அனுமதிப்பதில், முன்பெல்லாம் ஒரு ஒழுங்கு முறையோ கட்டுப்பாடோ இருக்க வில்லை. உணவுப்பயிர்கள், கால்நடைத் தீவனப் பயிர்களைவிட, அலங்காரச் செடிகளும் விவசாய சம்பந்தமற்ற செடிகளுமே வெளிநாடுகளிலிருந்து மிக மிக அதிகமாகக் கொண்டுவரப்பட்டுவந்தன. உணவு விஷயத்தில் சுயதேவையைப் பூர்த்திசெய்து கொள்ள நாம் உறுதிகொண்டிருப்பதால், உணவுப்பயிர்கள் விஷயத்திலேயே இப்பொழுது அதிக கவனம் செலுத்தவேண்டும்.

இந்தியாவில் தாவர அனுமதி ஸ்தாபனம் ஒன்றை அமைக்கவேண்டுமென்று, இந்திய விவசாய ஆராய்ச்சி சபையின் விவசாய போர்டு, 1935-ம் வருஷத்திலேயே இந்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்திருந்தது. இதற்கான தொரு ஆரம்பத் திட்டமும் 1946-ம் வருஷத்தில் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், இந்த ஸ்தாபனத்தை நிறுவுவதற்கு இன்னும் சிலகாலம் ஆகக்கூடும். ஆயினும், இத்துறையில், புது டில்லியிலுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் கடந்த நான்கு வருஷங்களாகச் செய்யப்பட்டுவந்துள்ள வேலை பெரிதும் திருப்தியளிப்பதாயிருக்கிறது.

கால்நடைத் தீவனம், இருபுற வெடிகனி, புல்வகைகள், மூலிகைகள் முதலிய இனங்களைச் சேர்ந்த 400 செடிகளும், சர்க்கரைவள்ளிக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, நிலக்கடலை, சோளம், வெங்காயம் முதலியவை 528-ம்; டொமடோ, கத்திரிக்காய் முதலிய காய்கறிச் செடி வகைகள் 125-ம்; கோதுமை, பார்லி, ஓட், கம்பு, ஆளிவிதை, எள்ளு முதலிய இனங்களைச் சேர்ந்த காட்டுச் செடிகள் 80-ம் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

டில்லியில், இந்தச் செடிகள் எவ்வாறு வளருகின்றன என்பதை ஆராய்ந்துபார்த்த பிறகு, இவற்றின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, பல்வேறு ராஜ்யங்களுக்கும், பரீட்சார்த்த சாகுபடிக்காக அனுப்பப்படுகின்றன. இந்தப் பரிசோதனைகளின் முடிவுகளை ஆதாரமாகக்கொண்டு, ஒவ்வொரு பிரதேசத்திலும் எந்தெந்த ரகங்களை லாபகரமாகப் பயிர் செய்யலாமென்பது நிர்ணயிக்கப்படுகிறது. இந்தப் பரிசோதனைகள் நடத்துவதற்கு பல்வேறு ராஜ்ய சர்க்கார்களின் விவசாய இலாகாக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும். இது விஷயத்தில் அவற்றின் ஒத்துழைப்பும் பூரணமாகக் கிடைத்திருக்கிறது. அமெரிக்கா, சீனா முதலிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட 41 விதமான சர்க்கரை வள்ளிக் கிழங்கின் பயிர்கள் இப்பொழுது இந்தியாவில் பல பகுதிகளில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்டுவருகின்றன. டம்-ஷின்-டூன் என்று வழங்கப்படும் சீன ரகம், இந்திய மண்ணில் மிக நேர்த்தியாக விளைவதாயும், உள்நாட்டு ரகங்களில் கிடைப்பதைவிட மூன்று மடங்கு கிழங்கு மாசூல் இடைப்பதாகவும், முந்திய வருஷங்களில் டில்லியில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து வெளியாகியிருக்கிறது. எழு வாரத்தில் பலன் கொடுக்கக்கூடிய பட்டாணிச் செடி யொன்று சமீபத்தில் பிலிப்பைன்னிலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கிறது. இந்த ரகச் செடியும் இந்தியாவில் நன்கு பயிராவதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டுத் தாவரங்களை அனுமதிப்பதில் ஒரு திட்டமான முறையைக் கையாளுவதால் எற்படக்கூடிய நன்மைகளுக்கு இவ்விரண்டு செடிகளுமே போதிய சான்றாகும்.

அமெரிக்க தொழில் சமஷ்டியின் சர்வதேச பிரதிநிதியாகிய ஜார்ஜ் பி. டிலானி.



பட்டாச்சி பிறந்து சரியாக ஒருவருஷ காலம் ஆயிற்று. அதாவது பட்டாஸா யிருந்த பட்டாச்சிக்கு மனித வடிவம் கிடைத்து ஒரு வருஷ காலம் ஆகிவிட்டது. ஆனல் இந்த ஒரு வருஷ காலத்தில் சாதாரணக் குழந்தையாயிருந்தால் அப்பா அம்மா என்று பேசப் பழகிக்கொள்ளும். தத்தித்தத்தி நடக்கப் பழகிக்கொள்ளும். தாய் சோறு ஊட்டினுல் தின்னப் பழகிக் கொள்ளும். பட்டாச்சி ஒரு அற்புதக் குழந்தையல்லவா! சுமார் பத்து வயது சிறுவனுக்கு உள்ள சூட்டிகை அதற்கு அற்புதமாகவே அமைந்திருந்தது. அது பள்ளிக்கூடம் போக ஆரம்பித்து இன்னும் மூன்றுமாதகாலம் ஆகவில்லை. அதற்குள் ளாக எழுதப்படிக்க நன்ருகக் கற்றுக் கொண்டுவிட்டதைக் கண்டு வாத்தியாரே ஆச்சரியப்பட்டார்.

"ஏ மக்குகளா! வருஷக் கணக்காய் பாடம் சொல்லிக் கொடுக்கிறேன். உங் களுக்கு இன்னும் சரியாக வரவில்லையே பட்டாச்சியைப் பாருங்கள், எத்தனை புத்தி சாலியாயிருக்கிறது. பாடம், கணக்கு எல் லாவற்றையும் எவ்வளவு விரைவாக அது கற்றுக்கொள்ளுகிறது பாருங்கள்" என்று வாத்தியார் மற்றப் பிள்ளைகளைப் பார்த்துச் சொல்லுவார்.

உண்மையிலேயே பிள்ளைகளுக்கெல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கும். வருஷம் ஆரம்பித்ததிலிருந்து அவர்கள் கற்றுக் கொண்டதை யெல்லாம் மூன்றே மாதத் தில் பட்டாச்சி கற்றுக்கொண்டு அவர்களுக்கு மேலேகூட படிக்க ஆரம்பித்தது.

முத்து கேட்பான் "பட்டாச்சி! உனக்கு எப்படி இவ்வளவு நன்ருகப் படிக்கத் தெரிகிறது?" என்று.

"வாத்தியாரைக் கேளுடா முத்து, என் னைக் கேட்டால் எப்படித் தெரியும்? படிப்பு அவர்தானே சொல்லிக்கொடுக்கிருர்?" என்று பட்டாச்சி பதில் சொல்லும்.

பிள்ளைகள் எல்லோரும் வாத்தியாரிடம் இதேக் கேள்வியைக் கேட்டார்கள். வாத்தி யாருக்கே பதில் சொல்லத் தெரியாது. "ஏன் ஸார்! நீங்கள் பள்ளிக்கூடத்திலே படிக்கிறபோது பட்டாச்சியைப் போல அத் தனை புத்திசாலியா யிருந்திருக்கிறீர்களா ஸார்?" என்று குறும்புக்காரக் குப்பு கேட்பான்.

வாத்தியார் சிரிப்பார். "குப்பு! நான் படிக்கிறபோது வாத்தியாரிடம் வாங்கின உதை, நீங்கள் இத்தனை பேரும் சேர்ந்து கூட என்னிடம் வாங்கவில்லை" என்பார்.

குப்பு: "அப்போ நீங்க ரொம்ப மக்கு ஸார்?"

வாத்தியார்: "ஆமாண்டா ஆமாம்!"

சீனு: அப்படியல்லடா குப்பு. நம்ம வாத்தியாரை விட அவருடைய வாத்தியார் ரொம்ப பொல்லாதவராயிருந்திருக்கவேண் டும்.

சுப்பு: அதல்லடா! அப்போதெல்லாம் பிரம்பு விலை ரொம்ப மலிவாயிருக்கும்!

இதைக் கேட்டு எல்லாப் பிள்ளைகளும் சிரித்தார்கள். பட்டாச்சிகூடச் சிரித்தது.

"பட்டாச்சி நீ எதற்காகச் சிரிக்கிருய்?" என்று வாத்தியார் வேண்டுமென்றே அதைப் பார்த்து கேட்டார்.

"பிரம்பு விலை அதிகமாயிருக்கிறபோதே இந்த சாம்பு உங்களிடம் இப்படி உதை வாங்குகிருனே; மலிவாயிருந்தால் இன் னும் எத்தனை உதை வாங்குவானே என்று நினைத்துப்பார்த்தேன். சிரிப்பு வந்தது என்று சாமர்த்தியமாகப் பதில் சொல்லியது பட்டாச்சி.